கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

27-10-1974

50 காசு



உங்களுடைய பார்சல்கள் எங்களுடைய வாழ்வு.



எனவேதான் உங்கள் பார்சல்களைப் பத்திரமாகவும், குறித்த நேரத்திலும், ஒழுங்காகவும் கொண்டு சேர்க்கிறோம்.

எப்படி என்று கேட்கிறீர்களா?

வேகமாக: ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நேரிடையாகச் செல்லும் பார்சல் சர்விஸ் இருப்பதனால் உங்கள் பார்சல்கள் வழியில் ஏறி இறக்கப்படுவதில்லை. மேலும் எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்தமானவை. எனவே காத்திருக்கத் தேவையில்லை. டிரெய்லர்களும் நிறைய இருப்பதால், அதிக பார்சல்களை விரைவில் ஏற்றிச் செல்ல முடியும். இவை தவிர, மின்னல்வேக சர்விஸ்களும் உண்டு. வண்டிகள் நடுவழியில் பழுதடைந்தால், உடனடியாகச் செப்பனிட பட்டறைகளையும் நிறுவியிருக்கிறோம்.

பத்திரமாக: எங்கள் டிரைவர்கள் அனைவரும் திறமைசாலிகள். அவர்களை அவ்வப்போது சோதனைகளுக்கும் உட்படுத்துகிறோம். அபாயம் இருக்கக் கூடிய நள்ளிரவு நேரங்களில் வண்டி ஓட்ட அனுமதிப்பதில்லை. மேலும் எங்களது ஏற்றி-இறக்கும் பணியாட்கள் அனுபவம் மிகுந்தவர்கள். உங்கள் பார்சல்களை பூப்போல கையாளக் கூடியவர்கள். எனவே பார்சல்கள் பத்திரமாகப் போய்ச் சேர்கின்றன.


ஒழுங்காக: எங்கள் ஊழியர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அனுபவசாலிகள். திறமையுடன் பணியாற்றுவதையே லட்சியமாகக் கொண்டவர்கள். இன்முகமும், புன் சிரிப்பும், இணையற்ற செயல் திறனும் இணைந்தவர்கள்.

இப்படித்தான் 60 ஆண்டு காலமாக உங்களுக்குத் தொண்டாற்றி வருகிறோம். இனியும் தொடர்ந்து பணி புரிவோம்.

TVS உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)



FDS SR 2008 TA




உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும் —
-- பாரதியார்

கோகுலம்

மலர் 3 □ இதழ் 15
அக்டோபர் 27, 1974
ஆனந்த, ஐப்பசி, 10

சந்தா விவரம்:
உள்நாடு
ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50
வெளிநாடுகள்:
ஆண்டுச் சந்தா ரூ. 25-00



மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா,
சென்னை - 600031

அட்டைப்பட ஆப்பிரிக்கச் சிங்கம்:
காட்டுக்கு ராஜா
நானே - ஆனால்
ஆட்சி புரிவதோ
அவனே!
வண்ணப் படம்: எஸ். அனந்த்



அப்போலோ பற்றிய அதிசயக் கதைகள்

விஜேயெம்

இயற்கையின் அற்புதங்களையெல்லாம் புராதன கிரேக்கர் தங்கள் கடவுளர்களோடு இணைத்து அழகான கதைகளாக வழங்கினார்கள். இவற்றுக்கு *Allegories* உவமைக் கதைகள் என்று பெயர்.


உதாரணமாக அதிகாலை வேளையில் பனித் துளி ஏன் எப்படி வருகிறது, சூரியனைக் கண்டதும் எப்போதும் அது ஏன் மறைந்து போகிறது என்பதற்கு ஒரு கதை!

ஒலிம்பஸ் என்ற மலைதான் கிரேக்கக் கடவுளர்களின் இருப்பிடம். சூரியக் கடவுளின் பெயர் அப்போலோ. ஒவ்வொரு நாளும் அதிகாலையில் அப்போலோ தனது நெருப்பு ரதத்தின் மீது ஏறி அமர்ந்து வான வீதியிலே பவனி வருவார். மாலையானதும் வானத்தின் மறுகோடியில் தயாராக இருக்கும் இருள் கடவுளிடம் தமது ரதத்தை ஒப்படைத்துவிடுவார்.

அப்போலோ அழகான கடவுள். காதல் மயக்கம் கொண்ட கடவுளும் கூட. ஒரு நாள் அப்போலோ பூமிக்கு வந்தார். டாப்னே (*Daphne*) என்ற அழகியைக் கண்டார். காலைப் பனித் துளியைப் போல ஜ்வலிக்கும் அழகி அவள். அவளுடன் பேசி மகிழ விரும்பிய அப்போலோ அவளை அணுகினார். ஆனால் அவளோ அவருடன் பேசும் ஆவலுடையவளாக இல்லை. ஆகவே ஓடலானாள். அப்போலோ விடுவதாக இல்லை. துரத்தினார். பாவம் டாப்னே நடுநடுங்கிப் போனாள். தன் வீட்டுக்கு அருகே வந்து விட்டவள், ஓடிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள். மிக அருகே அப்போலோ வந்துவிட்டதைக் கண்டு உள்ளே பாய்ந்தோடிப் போய்த் தன் அப்பாவின் மடியின் மீது விழுந்து விம்மி அழுதாள். அவள் தகப்பனார் மந்திர சக்தியுடையவர். நடந்ததை உணர்ந்த அவர் தம் மகளைச் சட்டென்று ஒரு மரமாக மாற்றிவிடுகிறார்.

துரத்தி வந்த அப்போலோ தாம் எட்டிப்பிடித்தது ஒரு மரமாக இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைகிறார். காலை இளங் கதிரவன் ஜ்வலிக்கும் பனித் துளிகளைக் கண்டு மயங்கி அருகே வரும் போது பனித் துளிகள் மறைந்து பசுமையான மரங்களும் இலைகளுமே அங்கு காட்சி தருகின்றன. இப்போதும் நடப்பது இதுதானே.

ஒரு சமயம் அப்போலோ தம் தகப்பனாரான ஜூபிடரின் கோபத்துக்கு ஆளாகிறார். கடவுளர்களின் கடவுள் ஜூபிடர். கொஞ்ச காலம் பூலோகத்துக்குப் போய் வசிக்கும்படி ஆணையிடுகிறார் ஜூபிடர். பூமியில் தன் நண்பன் ஹயாசிந்தஸுடன் ஒரு நாள் அப்போலோ க்வாய்ட்ஸ் என்ற விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறான். அப்போலோவிடம் தென் திசைக்காற்றுக்குப் பொறாமை. அப்போலோ வீசிய வட்டைத் தன் சக்தியால் நடு வானத்துக்குத் தூக்கிப்போய் வேக



மாக அதை நண்பன் ஹயாசிந்தஸின் மீது மோதச் செய்கிறது தென்திசைக் காற்று. இதனால் படுகாயமடைகிறான் ஹயாசிந்தஸ். அதைக் கண்டு வேதனை அடைகிறார் அப்போலோ. தன் நண்பன் ஹயாசிந்தஸின் தலையிலிருந்து சிந்திய ரத்தத் துளிகளைச் சிவப்பு மலர்களாக மாற்றி விடுகிறார். ஹயாசிந்த்ஸ் — என்ற சிவப்பு மலர்கள் தோன்றியது இப்படித்தான்.


சூரியக் கடவுளான அப்போலோவின் பிள்ளையாக இருந்தால் நீங்கள் பள்ளிக்கூடத்தில் எத்தனை பெருமையாக அப்பாவைப் பற்றிப் பேசுவீர்கள்? ஃபேடன் அப்படித்தான் தன் நண்பர்களிடம் தன் அப்பாவான அப்போலோவைப் பற்றி ரொம்பவும் பீற்றிக்கொண்டான். கொஞ்சம் அளவுக்கு மீறியே இருந்தது அவன் பேச்சு. வானத்தைச் சுட்டிக்காட்டி, ''அதோ போகிறார் பார் என்னுடைய அப்பா, தன்னுடைய ரதத்தில்'' என்று கூறுவான். ''அவர் கடவுளாக்கும்'' என்பான். இதை அடிக்கடி அவன் கூறியது அவன் பள்ளித் தோழர்களுக்கு அலுப்பையும் எரிச்சலையும் மூட்டியது. சைனஸ் (*Cycnus*) என்ற ஒரே ஒரு தோழனைத் தவிர மற்றவர்கள் எல்லாம் அவனை விட்டுப் பிரிந்தார்கள்.

ஒரு நாள் சிறுவன் ஃபேடன் வழக்கம் போல் தற்பெருமையடித்துக்கொண்ட போது அவன் தோழர்கள், ''உன் தகப்பனார் ஒரு கடவுள் என்பதை நீ நிரூபித்துக் காட்டினால்தான் நாங்கள் நம்புவோம்'' என்றார்கள். ''நீ அப்போலோவின் மகன் என்பது உண்மையானால் உன்னால் ஆகாததே ஏதும் இருக்காதே?'' என்றார்கள்.

''அதானே!'' என்று ஒத்துப் பாடினார்கள் மற்றவர்கள். தான் சூரியக் கடவுளின் மகன் என்பதை அவர்களுக்கு நிரூபிக்க வேண்டும் என்ற வெறி உண்டாயிற்று ஃபேடனுக்கு. அன்று இரவு தன் தகப்பனாரை எப்படியும் சந்திப்பது என்று உறுதி கொண்டான். தாயாரிடமிருந்து அப்போலோவின் அரண்மனைக்குப் போகும் வழியை அறிந்து கொண்டான். அது கிழக்குத் திசையிலிருந்தது. ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கிழக்குத் திசையிலிருந்து தானே சூரியோதயம் ஆகிறது?

அப்போலோ துயில் எழுந்து தன் ரதத்தில் ஏறுவதற்கு முன்பாக ஃபேடன் அவர் முன் போய் நின்று விட்டான். சூரியக் கடவுள் உடனே தன் மகனை இனங்கண்டு கொண்டார்.

''இங்கு எதற்காக வந்தாய்?'' என்று கேட்டார் அப்போலோ.



''என்னுடைய பள்ளித் தோழர்கள் நான் உங்களுடைய மகன் என்பதை நம்ப மறுக்கிறார்கள். அதை நான் அவர்களுக்கு நிரூபிக்க வேண்டுமாம்'' என்றான் ஃபேடன்.

அப்போலோவுக்குக் கோபம் வந்தது. ''அதெப்படி அவர்கள் நம்ப மறுக்கலாம். அத்தனைக்காயிற்று? எந்த விதமாக நிரூபிக்க வேண்டுமானாலும் சரி, நிரூபித்துக் காட்டுகிறேன், சொல்'' என்றார் அப்போலோ.

''அப்படியானால் இன்று சூரியத் தேரை வான வீதியிலே நான் ஓட்டிச் செல்ல அனுமதியுங்கள். பூமியில் உள்ளவர்கள் தேரை ஓட்டிப் போவது நான் என்பதைப் பார்த்ததும் நான் உங்களுடைய மகன்தான் என்பதை அறிந்து கொள்ளுவார்கள்'' என்றான் ஃபேடன்.

அப்போதுதான் அப்போலோ ஆத்திரத்தில் அவசரப்பட்டுத்தான் வாக்களித்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தார். ஆனால் காலம் கடந்துவிட்டது. கடவுளர் கொடுத்த வாக்கை மீறக் கூடாது. சூரியத் தேரை இழுத்துச் செல்லும் முரட்டுக் குதிரைகளை அடக்கி ஓட்ட அவர் ஒருவரால் தான் முடியும். பத்திரமான பிரயாணத்துக்கு அவர் ஒருவரால்தான் உத்தரவாதம் அளிக்க முடியும்.

வேறு ஏதாவது கேட்கும்படி மகனிடம் மன்றாடினார் அப்போலோ. ஆனால் பிடிவாதக்கார ஃபேடன் வேறு எதற்கும் இணங்கவில்லை. சூரியத் தேரை ஓட்டிச் சென்று தன் தோழர்களைத் திகைக்க வைக்க விரும்பினான். நேரமோ ஆகிக் கொண்டிருந்தது. பொழுது புலர வேறு வழியில்லை. அப்போலோ அவசர அவசரமாகச் சில எச்சரிக்கைகளைக் கூறி சூரியத் தேரை ஓட்டுவதற்கான அனுமதியை அளித்து அவன் கையில் தேர்க் கயிற்றையும் கொடுத்தார். ஃபேடன் தனது சவுக்கைச் சொடுக்கி, அரோரா என்ற அதிகாலைக் கதவுகளைத் திறந்து விடும்படி கட்டளையிட்டான். பளீர் என்ற ஒளி



யுடன் கட்டுக்கடங்காத வேகத்துடன் குதிரைகள் வான வீதியை நோக்கிப் பாய்ந்தன.

முதலில் ஃபேடன் மிகக் கவனமாகக் குதிரைகளை நேரான பாதையில் ஓட்டிப் போனான். ஆனால் கொஞ்ச நேரமானதும் ரொம்பவும் நம்பிக்கை கொண்டவனாக அலட்சியமாகத் தேரை பூமிக்கு மிக மிக அருகில் ஓட்டிப் போகலானான். பலன் மிகப் பயங்கரமானதாக இருந்தது. தாவரங்கள் கருகின. வாடின. நதிகள் காய்ந்தன. வீடுகள் குபீரென்று தீப்பற்றிக் கொண்டன. தன்னுடைய கவனக் குறைவினால் நேர்ந்த விபரீதங்களை அறிந்த ஃபேடன் தேரை ஆகாயத்தில் மிக உயரத்துக்குக் கொண்டு போனான். பதட்டத்தில் மிக மிக உயரத்துக்குப் போய்விட்டான். இப்படி அவன் சென்ற பகுதிகளில் பூமியில் கதகதப்பு மறைந்தது. எங்கும் பனி மூடியது. அங்கிருந்த மரங்கள் குளிர் தாங்காமல் மடிந்தன. நதிகள் உறைந்தன. மழைத் துளிகளும்கூட கெட்டியாகி ஊசியாக உறைந்தன.

பூமியில் உள்ளவர்கள் 'இன்று சூரியக் கடவுளுக்கு என்ன வந்தது? இப்படி விபரீதங்கள் நிகழ்கின்றதே?' என்று கோபத்தினால் கத்தினார்கள், இகழ்ந்தார்கள், ஏசினார்கள். மனிதர்களின் இந்தக் கூச்சல் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த கடவுளர்களின் கடவுளான ஜூபிடரை உசுப்பி எழுப்பியது. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு இத்தகைய கூச்சலுக்கான காரணம் என்ன என்று பார்த்தார். சூரியத் தேரில் அப்போலோவுக்குப் பதில் யாரோ அமர்ந்து ஓட்டுவதைக் கண்டார். கோபம் கொப்பளித்தது.

''அந்தப் பைத்தியக்காரனை நிறுத்துங்கள்'' என்று கர்ஜித்தார். தன் ஆயுதமான இடியில் ஒன்றை எடுத்து ஃபேடன்மீது வீசினார். பாவம் ஃபேடன். இடியினால் தாக்குண்ட அவன் இறந்து ஒரு நதியில் விழுந்தான். அவனுடைய ஒரே ஒரு நண்பனான சைனஸ் கருகிப் போன அவன் உடலின் பகுதிகளை நதியிலிருந்து சேகரிக்க ஓடோடி வந்தான். ஆனால் எதுவுமே கிடைக்கவில்லை. தேடிக் கொண்டே இருக்கிறான் இன்னமும். நண்பன் சைனஸ்தான் இன்றுள்ள அன்னப் பறவைகள். வேதனை கலந்த பார்வையோடு தன் நீண்ட கழுத்தை நீரை நோக்கி வளைத்துப் பார்த்தபடி ஆடாமல் அசையாமல் அன்னப் பறவை போய்க் கொண்டிருக்கிறதே, எதற்காக? தன் நண்பனின் கருகிய உடலின் உறுப்புக்களைத் தேடிக் கொண்டுதான்.

வாடா மலர்



கோழைத்தனமும் விரோதமும் பயமும் குடி கொண்டிருக்கும் மனத்தில் ஈசுவரன் பிரத்தியட்சமாவதில்லை.

- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

புல்லால் மானும், நீரால் மீனும், சந்தோஷத்தால் நல்லோரும் ஜீவித்துக் கொண்டிருக்க அவர்களுக்கும்கூட இவ்வுலகில் முறையே வேடன், செம்படவன், கோள் சொல்லி இவர்கள் யாதொரு காரணமுமில்லாமலே சத்துருக்களாகிறார்கள்.

- பர்த்ருஹரி.

பையன் :

அப்பா, அம்மா, கேளுங்கோ,
உடனடியாய் வெகு அவசரந்தான் -
தப்பாமல்தான் கேளுங்கோ பின்
தகராறெல்லாம் வேண்டாங்கோ !

சின்னப் பசங்கள் நாங்களெல்லாம்,
சிரணி ஒன்று சேர்ந்தாச்சு !
என்றும் எங்களை விரட்டும் அந்தக்
கொடுமை இனிமேல் நடக்காது !

'படிடா படிடா' என்றிடுவீர்,
பாடம் தவிர வேறில்லை -
'தடியா மடையா' என வைவீர்-
தளர்ந்தே கொஞ்சம் சோர்ந்தால்தான்.

'ஆஃபீஸ்' தனிலே கோளாறு,
எங்கள் முதுகில் ஐந்தாறு -
'நோஃபீஸ்' என்றால் உடனடியாய்,
எங்கள் மீது பாய்வீரே !

இனிமேல் இதெல்லாம் நடக்காது,
எங்கள் சிரணி வந்தாச்சு,
தனி ஒரு முதுகில் அடிபட்டால்,
தடுக்கும் எங்கள் சிரணியே !

பெற்றோர் :

துள்ளித் திரியும் பருவத்தில்
துடுக்காய் விட்டால் தகராறு -
சன்னை இந்த வாழ்க்கைதான்,
சரியாய்ப் புரியணும் பார்த்துக்கோ!

இன்றைக்குங்கள் வழிவிட்டு,
'உன் வழி நீயே போ' என்றால்,
பின்னால் ஒன்றும் புரியாது,
பண்போ உன்னில் வளராது.

கோழி மிதித்தால் சாகாது
குஞ்சுகள் என்றே கேட்டிருப்பாய்-
தாழியை நன்றாய் வைத்தால்தான்
திரளும் வெண்ணெய் உண்மையிது.


ஆகையினாலே கேட்டுக்கோ,
அடிப்பதும் உங்கள் நன்மைக்கே,
ஆசை எமக்கே கிடையாதோ ?
அன்பும் உண்டு நன்றாய்ப் பார் !

படித்திடு, அதுவே உன் கடமை,
போராட்டங்கள் பின்னாலே-
துடித்திடும் இளமை வேகத்தால்
துட்டத் தனமாய்ப் பேசாதே !

பையன் :

சொன்னது எனக்கே புரிஞ்சாச்சு,
சொல்வேன் இதனை மற்றோர்க்கும்
நன்றது நன்றாய்ப் படிப்பதுவே;
சிரணி இன்றே கலைஞ்சாச்சு !

"சின்னச் சிரணி வந்தாச்சு"



பிரகஸ்பதி

காடே எங்கள் வீடு

குமரி முதல் இமயம் வரை ஆயிர மாயிரமாய்ப் பெரிய காடுகளும், சிறிய காடுகளும் இருந்தன. காட்டு மிரு கங்கள் நிறைய இருந்தன. மனிதர்கள் நிறையப் பெருகி, பல காடுகளை அழித்து ஊர்களாகச் செய்து விட்டனர். ஆத லால் காட்டு மிருகங்களின் தொகை குறைந்து கொண்டே வருகிறது.

ஒரு நாட்டின் செல்வம் என்றால் என்ன? அங்கே விளையும் விளைபொருள் களைப் போல, அங்கே கிடைக்கும் கனிப் பொருள்களைப் போல, அந்தப் பகுதி மிருகங்களும் சேர்ந்ததுதான் அந்த நாட்டின் செல்வம்.

நமது நாட்டில் பண்டை நாள் தொட்டு வாழ்ந்து வரும் வன விலங்கு இனங்கள் அடியோடு அழிய விட லாமா? அவற்றைப் பாதுகாத்து வைக் கப் பல ஏற்பாடுகள் நடக்கின்றன.

நாடெங்கும் பல நகரங்களிலும் மிரு கக் காட்சிச் சாலைகளில் வன விலங்கு களைப் பாதுகாத்து வைக்கிறார்கள். ஆனால் காட்டு மிருகங்கள் காடுகளில் தானே இயல்பாக வளரும்! ஆகவே, பல காடுகளை வன விலங்குகளுக்கென்றே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். வன







△ "நிறையக் கரும்பு சாப் பிடுவீர்களாமே? உங்களுக்கு ஷுகர் கம்ப்ளெயின்ட் கிடையாதா?"

"கரும்பு மட்டும் தின்ப தில்லை, கடினமாக வேலை யும் செய்வோம். என்னோடு இங்கே வந்து பாருங்கள்."

◁ "அம்மாடியோவ்? எத் தனை பெரிய மரம், எவ் வளவு அநாயாசமாக நகர்த் தித் தள்ளுகிறீர்கள்!"

விலங்குகளின் இந்தச் ''சரணாலயங்'' களில் யாரும் வேட்டையாடக் கூடாது. இயற்கைச் சூழலில் மிருகங்கள் வாழ் வதை வேடிக்கை பார்க்கவே அங்கே போகலாம்; வேட்டையாடுவதற்கல்ல. இப்படி இந்தியாவில் 130 வனப் பகுதிகள் உள்ளன.

இத்தனை வருஷங்கள் இந்த விஷயத் தில் அக்கறை காட்டாததால் நமது நாட்டில் புலிகள் மடமடவென்று வேட் டையில் கொல்லப்பட்டு விட்டன. இப் போது சுமார் 2000 புலிகள்தான் பார தத்தில் இருக்கின்றன.


புலிகளையும், மணிப்பூர் மான்கள் போன்ற அபூர்வ மிருகங்களையும் வளர்க் கும் மிருகக் காட்சி சாலைகளில் இவை ஒரு குட்டி போட்டு விட்டால், அடடா, எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள் தெரி யுமா? அங்கே ஒரு திருவிழாவே கொண் டாடி விடுவார்கள்: அடைபட்டுக்கிடக் கும் மிருகங்கள் குட்டி போடுவது அவ்வளவு அபூர்வம்.

காட்டு மிருகங்களால் நாட்டு மக்க ளுக்குத் தீங்கு வரக் கூடாது என்று முன்காலத்து மன்னர்கள் வேட்டைக் குப் புறப்படுவார்களாம்.

இன்றோ, நாட்டு மக்களால் காட்டு விலங்குகளுக்கு ஆபத்து நேர்கிறதே என்று பல பொதுப் பணித் தொண் டர்கள் எழுபது எண்பது ஆண்டுகளாக முறையிட்டு வருகிறார்கள்.

நாம் ஆண்டுதோறும் 'வன விலங்கு வாரம்' கொண்டாடி வருவதும் இதற் காகத்தான். —தம்பி சீனிவாசன்





ட ''அஞ்சு டன் யானையை அஞ்சாமல் தூக்குவோம்!''

❁

''ஹாப்பி பர்த் டே டு யூ!'' உங்களுக்கு எங்கள் பிறந்த தின வாழ்த்துக்கள். ▽







மழையில் நனையும் பிரஜைகள்

கே. பாலசந்திரன் நாயர்

முன்னொரு காலத்தில் சீன நாட்டை லியு என்னும் அரசன் ஆண்டு வந்தார். மக்கள் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர் அவர்.

ஒரு நாள் அரண்மனையில் இருந்த தம் அறையில் இருந்தபடி அரசர் ஜன்னல் வழியாக நகரத்து வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தார். மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. திடீரென்று அவர் தெருவோடு நடந்து செல்லும் தம் பிரஜைகளைக் கவனிக்கலானார். என்ன சங்கடம்! மக்கள் மழையில் நனைந்தபடியே சென்றுகொண்டிருந்தனர். 'இவர்களுக்கெல்லாம் குல்லாய் அணிவித்தால் என்ன? மழையில் நனைந்தால் நோய் வராதா?' மன்னர் யோசித்தார். ஒரு வேளை இவர்கள் எல்லாரும் குல்லாய் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். இப்படி நனைந்து கொண்டே போவதின் காரணம் அதுவாகத்தான் இருக்கலாம். அப்படியென்றால் குல்லாய் இல்லாதவர்களுக்கு அதை அளிக்க வேண்டியது தம் கடமை என்று எண்ணினார் அரசர். மனமிரங்கிய மன்னர் மந்திரியைக் கூப்பிட்டனுப்பினார்.

"அமைச்சரே! நம் இராஜ்யத்தில் ஏராளமான மக்கள் மழையில் நனைந்து அவதிப்படுவதற்குக் காரணம் என்ன? அவர்களுக்கெல்லாம் குல்லாய் கிடையாது என்றால் உடன் கொடுப்பதற்கான வசதி செய்ய வேண்டும். நம் இராஜ்யத்தில் குல்லாய் இல்லாதவர்கள் எத்தனை பேர்கள் என்று கணக்கெடுக்க வேண்டும்" என்றார்.

'தகுந்தபடி செய்யலாம்' என்று கூறி அரண்மனையிலிருந்து விடைபெற்ற மந்திரி காவல் துறை மேலதிகாரியைச் சந்தித்துக் கூறினார். "நமது நாட்டில் குல்லாய் அணியாமல் ஏராளமான மக்கள் மழையில் நனைந்து அவதிப்படுவதை அரசர் கவனித்திருக்கிறார். உடனடியாக அவர்களது எண்ணிக்கை வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதற்கான ஏற்பாடுகளை உடனே செய்யுங்கள்."

மந்திரி கூறியதைக் கேட்ட காவல் துறை மேலதிகாரி நாடெங்கும் உள்ள காவல் துறை அதிகாரிகளை அழைத்து வரச் செய்து கட்டளையிட்டார். "நம் நாட்டில் உள்ள சில முட்டாள்கள் குல்லாய் அணியாமல் மழையில் நனைவதை அரசர் பார்த்திருக்கிறார். காவல் துறையினர் தான் இதற்குக் காரணம் என்று கோபம் கொண்டுள்ளார். அதனால் குல்லாய் அணியாதவர்களையெல்லாம் உடனடியாகத் தேடிப் பிடிக்க வேண்டும். சரியான தண்டனையும் அளிக்க வேண்டும். ஒவ்வோர் அதிகாரியும் உடனே இப்பணியில் தீவிரமாக இறங்க வேண்டும்!"

பற்றிக் கொண்டது நெருப்பு. காவல் அதிகாரிகள் தங்கள் பெரிய மீசைகளை முறுக்கிக் கொண்டு தங்கள் காவல் நிலையத்துக்குத் திரும்பினர். சிப்பாய்கள் வரிசையாக நின்று சலாம் போட்ட



போது அதிகாரி கர்ஜித்தார். "ஏய், மக்குகளா! எதுக்குடா நீங்களெல்லாம் இந்தச் சீரணிகளை மாட்டிக்கிட்டு நிற்கிறீர்கள்? குல்லாய் அணியாமல் மழையில் நனைந்து கொண்டு ஏராளமாய்த் திருடர்கள் அரண்மனை வீதியில் நடமாடுவது உங்களுக்குத் தெரியவில்லையா? அவர்களெல்லாம் பக்காத் திருட்டுப் பசங்களாக்கும். மழையில் நனையும் குல்லாய் அணியாதவர்களையெல்லாம் பிடிச்சுத் தீர்த்துக் கட்டணும்... இல்லேன்னா...!"

காவல் துறை சிப்பாய்கள் தங்கள் வாள்களைத் தீட்டிக் கொண்டு வீதியில் இறங்கினார்கள். குல்லாய் அணியாமல் சென்று கொண்டிருந்தவர்கள் அத்தனை பேரையும் பிடித்துத் தலையைச் சீவி விட்டனர்.

வேலை முடிந்த பிறகு அவர்கள் காவல் அதிகாரியிடம் சென்று விவரம் தெரிவித்தார்கள். அது காவல்துறை மேலதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலதிகாரியோ மந்திரியிடம் சொன்னார். மந்திரி அரசரிடம் போய்க் கூறினார்: "பிரபோ! குல்லாய் அணியாத ஒருத்தன்கூட நம் இராஜ்யத்தில் இல்லை. வீடு வீடாகத் தேடிப் பார்த்தோம். ஆனால் அதிசயம்தான். தங்கள் சொன்ன மாதிரி ஒருவனைக்கூடக் காண முடியவில்லையே!"

அப்பாவியின் காப்பி!

வேலை இல்லாமல் ஏராளமான சீனர்கள் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருந்தனர். அதில் சூநூவும் ஒருவன். ஒரு நாள் சில வெள்ளைக்கார ராணுவ வீரர்கள் அவனைச் சந்தித்தனர். அவன் உருவத்தைப் பார்த்த உடனே அவர்களுக்கு மனம்இரங்கியது. அவர்கள் சூநூவைத் தங்கள் முகாமுக்குக் கூட்டிச் சென்றனர். அவர்களுக்குச் சமையல் செய்வதுதான் அவன் வேலை.

சூநூவின் மொட்டைத் தலையைப் பார்த்ததும் அவர்களுக்குச் சிரிப்பாக வந்தது. அவன் மொட்டை மண்டையில் பழத் தோலை எறிந்து விளையாடி ரசித்தனர். ஆனால் சூநூ இதை மறுத்து ஒன்றுமே பேசவில்லை. அதனால் அவன் தலையில் பழத் தோல்கள் மேலும் ஏராளமாக விழுந்து கொண்டே இருந்தன.


ஒரு நாள் புது ராணுவ வீரன் ஒருவன் அந்த முகாமில் வந்து சேர்ந்தான். தன் தோழர்கள் சூநூவிடம் நடந்து கொள்ளும் முறை அவனுக்குப் பிடிக்கவில்லை. "ஏன் இவனை இப்படி துன்புறுத்துகிறீர்கள்? அவனால் உங்களை ஒன்றும் பண்ண முடியாது என்றாலும் அவனும் இதயம் உள்ள ஒரு மனிதப் பிறவிதானே?" என்று கூறினான் மனிதாபிமானம் மிக்க அந்த இளைஞன்.

எல்லோரும் அதை ஒப்புக் கொண்டனர். தங்கள் தவறை உணர்ந்தனர். "சூநூ, நடந்ததையெல்லாம் மறந்துவிடு. நடந்ததுக்கெல்லாம் நாங்கள் வருந்துகிறோம். இனி இவ்வாறு நடந்து கொள்ளமாட்டோம்" என்று உறுதி கூறினார்கள்.

சூநூ பூகோளம் போன்று உருண்டையான தன் தலையை நிமிர்த்தினான். பின் சாந்தமான குரலில் சொன்னான். "அப்படியென்றால் உங்களுக்காகச் சாக்கடைத் தண்ணீரில் காப்பி போடுவதை இன்றோடு நிறுத்திவிடுகிறேன்."

வெள்ளை ராணுவ வீரர்களின் முகம் எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்!





சிறுநீரகங்கள்

நம் உடலில் உள்ள மிக அவசியமும் முக்கியமுமான அவயவங்களுள் ஒன்று சிறுநீரகங்கள் (கிட்னி) அவரை விதைகளைப் போன்ற உருவத்தில் தட்டையாக இடுப்பின் இரு பக்கத்திலும் — முள்ளம்தண்டின் அருகே உள்ள கெட்டியான உருப்புக்கள் இவை. இதன் நீளம் சுமார் நான்கு அங்குலங்கள். உடலுக்கு வேண்டப்படாத பொருள்களை வெளியேற்றுவதற்கு உதவுகின்றன, இந்த உறுப்புக்கள். ரத்தத்தில் தண்ணீரும் மற்ற பொருள்களும் எப்போதும் ஒரே சீராக இருக்கும்படி பார்த்துக் கொள்ளும் காரியத்தையும் சிறுநீரகங்கள் செய்கின்றன.

ஒவ்வொரு சிறுநீரகத்தின் வெளிப்புறத்திலும் தந்துகிகள் ஏராளமான சுருக்குகளை உண்டாக்கி அதை மூடி இருக்கும். இதை ஒரு மெல்லிய ஜவ்வு போர்த்தி இருக்கும். ஒவ்வொரு கிட்னியிலும் இப்படிச் சுமார் 1,500,000 சுருக்குகள் பந்துபோல் இருக்கும். இந்த திசுக் கொத்துக்களுக்கு *Glomeruel* என்று பெயர். ஒவ்வொரு நிமிஷத்திலும் உடலின் மற்ற அவயவங்களுக்குப் பாயும் ரத்தத்தைவிட அதிகமாகக் கிட்னிகளில் பாய்கிறது. ரக்தத்துடன் கரைந்து கலந்து வரும் சில முக்கியமான திரவங்களை இந்தக் க்ளோமருல்கள் ஜவ்வுகளின் மூலம் பாய்ந்து செல்ல அனுமதிக்கின்றன. இப்படி அனுமதிக்கும் அந்தப் பொருள்தான் சிறுநீர் (*Urine*) கோப்பை போன்ற அமைப்புடைய உருப்பில் இவை சேமிக்கப்படுகின்றன. உடலுக்குத் தேவையான பொருள்கள் ரத்தத்துக்கு மறுபடி அனுப்பப்படுகின்றன. இதிலுள்ள நீரின் பெரும் பகுதி ரத்தத்துக்குத் திரும்புகிறது. இந்த முறையினால் உடலின் நீர் அளவு ஒரே சீராக வைக்கப்படுகிறது.

சிறுநீரகங்களிலிருந்து கழிவு நீரான சிறுநீர் இரு குழாய்கள் மூலம் பிளாடர் என்ற சிறுநீர்ப் பையை அடைகின்றது. அது நிறைந்ததும், உடலைவிட்டு வெளியேற்றப்படுகிறது.

உலகின் மிகப் பெரிய பிராணி....

ஏது தெரியுமா? யானை என்று கூறினீர்களானால் அது தவறு. திமிங்கிலந்தான் உலகின் மிகப் பெரிய பிராணி. நலத் திமிங்கிலம் அல்லது கந்தக நிறமுடைய அடிப் பாகத்தைக் கொண்ட திமிங்கிலம் — இதன் நளம் 100 அடிகளுக்கும் மேலே. நிறை 125 டன்கள். இது எல்லாக் கடல்களிலும் காணப்பட்டாலும் பசிபிக் கடலில்தான் அதிகம். திமிங்கிலங்களில் பற்கள் உடையது, பற்கள் இல்லாதது என்று இரு வகை உண்டு. உலகிலேயே மிகப் பெரிய பிராணியான திமிங்கிலத்துக்குப் பற்கள் இல்லாவிட்டால் எப்படி உணவுண்டு வாழ முடியும் என்று வியப்படைகிறாய் அல்லவா ?

இவற்றின் வாயில் பாலீன் (*Baleen*) என்ற ஒரு வகை உறுப்புக்கள் ஏராளமாக இருக்கின்றன. மேல் அண்ணத்திலிருந்து கீழ் நோக்கி இவை தொங்கும். எலும்பு போன்று கெட்டியாக இருக்கும். திரைச் சீலையைப் போல இவை வாயில் செயல்படும். திமிங்கிலம் உணவு உண்ண வாயை அகலத் திறந்தபடி வேகமாக நீந்திப் போகும் போது இதன் அகண்ட வாயினுள் ஏராளமான கடல் வாழ் ஜந்துக்கள் நீருடன் போகும். இது தன் வாயை மூடியதும் பாலீன்களின் இடைவெளி வழியே நீர் மட்டும் வெளியேற உணவுப் பொருள் உள்ளேயே சல்லடை போட்டுத் தடுத்தது போல நின்றுவிடும்.

திமிங்கிலம் நீரில் வாழ்வதாலும் அதன் உடல் மீனினுடையது போல் இருப்பதாலும் நாம் அதை மீன் இனத்துடன் சேர்த்துவிடக் கூடாது. அதன் எலும்புக் கூடு, ரத்த ஓட்டம், மூளை அமைப்பு, மற்ற உறுப்புக்கள் ஆகியவை அதை மீனிலிருந்து மாறுபடுத்துகின்றன. குட்டி போட்டுப் பால் கொடுக்கும் வகையைச் சேர்ந்தவை திமிங்கிலங்கள். பன்னெடுங்காலங்களுக்கு முன்னால் தரையில் வாழ்ந்து கொண்டிருந்த இனத்திலிருந்து திமிங்கிலம் வந்திருக்க வேண்டும். இதன் பக்கவாட்டில் உள்ள ஃபிளிப்பர்கள் என்னும் தோல் மூடிய துடுப்புக்களில் உள்ள எலும்புகள் ஐந்து விரல்கள் உடையது போல் இருக்கும். பல்லாயிரம் ஆண்டுகளாக இவை நீரிலேயே வாழ்ந்துவருவதால் அதற்கு ஏற்றதான வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டுவிட்டன போலும்.





மண்வளம்

இன்று பூமியில் நீங்கள் காணும் நிலம் அத்தனையும் ஒரு காலத்தில் பாறையாக இருந்தது தான். லட்சக்கணக்கான ஆண்டுகளாக இயற்கையின் செய்கையால் பாறைகள் இன்று நிலமாகியுள்ளன. வெய்யிலும், மழையும், காற்றும் பனியும் பாறைகளைப் பொடியாக்கி, மணலாக்கி மண்ணாகி இருக்கிறது.

இப்படிப் பாறைகள் நிலமானது பல வழிகளில். உஷ்ணமும் குளிர்ச்சியும் மாறி மாறித் தாக்கும்போது பாறைகளின் மேற்பரப்பில் வெடிப்பு ஏற்படும். அது உடைந்து உதிரும். புயல் காற்று பாறைப் பொடிகளை உருட்டி உதைத்து உந்திச் செல்லும். கிளேஸியர் என்ற பனிக் கட்டியாறுகள் கற்பாறைகளின் மேல் பரப்பைச் சுரண்டிக் கொண்டு போகும். வேகமாக ஓடும் நதிகளின் நீரோடு வரும் சேரும், மணலும் பாறையின் மேல் பரப்பை அரித்துக் கொண்டு போகும். கடல் அலைகள் பாறைகளின் மீது மோதி மோதி அதை உடைத்துச் சிறுசிறு துகள்களாக்கிச் செல்லும். சில வித பாக்டீரியாக்களின் உடலிலிருந்து வெளியாகும் அமிலத்தினாலும்பாறைகள் பொடித்துப் போகின்றன.

நிலத்தை அதில் அடங்கியுள்ள பாறைத் துகள்களின் அளவு அடர்த்தி இவைகளைக் கொண்டு தரம் பிரிக்கலாம். களி மண் நிலம் மிக நுண்ணிய மண் துகள்களைக் கொண்டிருக்கும். இது கனமாகவும் குளிர்ச்சியாகவும் ஈரநைப் புடனும் காணப்படும். மணல்பாங்கான நிலத்தில் 'மணல்தான் அதிகம் இருக்கும். களி மண்ணும் மணலும் மட்கிய தாவரப் பொருள்களும் நிறைந்தது ஒரு வகை நிலம்.

தாவரங்கள் செழித்து வளர்வதற்கு ஏற்ற நிலம் மணல், மண் இவைகளைத் தவிர தாது உப்புக்கள் ஜீவராசிகளின் மட்கிய உறுப்புக்கள், உயிருள்ள ஜீவராசிகள் இத்தனையும் சேர்ந்திருக்கவேண்டும். ஒரு நிலத்தின் செழுமையை அது தாவரங்களுக்கு அளிக்கும் உணவு, காற்று, நீர் இவைகளின் தன்மையைக் கொண்டுதான் கணக்கிடுவார்கள்.

தாவரங்களுக்குத் தேவையான அத்தனை உணவுப் பொருள்களும் ஒரு நிலத்தில் இருந்தும் அவைகளைக் கரைத்து வேர் மூலம் மேலே அனுப்பத் தண்ணீர் இல்லாவிட்டாலும் அந்த நிலம் வெறும் பாழ்தான்.


ஈயின் ஆகாரம் என்ன ?

சாதாரண வீட்டு ஈ எங்கிருந்தாலும் தனக்குத் தேவையான உணவைத் தேடி அடைந்து வாழ்ந்துவிடும் வல்லமை கொண்டது. காரணம், இதனுடைய கனமில்லாத சின்னஞ் சிறிய உடல். நன்கு முதிர்ந்த ஆயிரம் ஈக்களின் நிறை ஒரு அவுன்ஸுக்கும் குறைவாகத்தான் இருக்கும்.

வீட்டு ஈ திடமான உணவை உட்கொள்வதில்லை. ஏனென்றால் உணவுப் பொருளைக் கடிக்கும் சாதனம் இவைகளிடம் கிடையாது. ஈயின் வாய்ப் பகுதி திரவ உணவை உறிஞ்சிக் கொள்ளும் வகையில்தான் அமைந்துள்ளது. ஈயின் நாக்கு யானையின் துதிக்கையைப் போன்ற அமைப்புடையது. இதன் நுனியில் உள்ள அவயவம் (Lobe) திரவ உணவை இழுத்துக் கொள்ளுகிறது. ஒரு சர்க்கரைக் கட்டியின் மீது ஈ உட்கார்ந்ததும் இது தன் உமிழ் நீரை இதன் மீது படரவிடுகிறது. இது சர்க்கரையைக் கரைத்துத் திரவமாக்குகிறது. எந்தப் பொருளையும் இதன் உமிழ் நீர் கரைத்துத் திரவமாக்கிவிடும்.

'ஈக்கடி' என்கிறார்களே, அது ஏன்? ஈயினால் கடிக்க முடியாத போது இதற்கு இப்படியொரு அவப் பெயர் வருவானேன் ? கடிக்கும் ஈக்கள் வீட்டு ஈக்களல்ல, ஈக்களில் பல வகை உண்டு. பார்வைக்கு ஒன்றே போல தோன்றுவதனால் வீட்டு ஈயையும் மற்ற ஈக்களையும் தவறாகக் குழப்பிக் கொள்ளுகிறோம்.

வீட்டு ஈ மனிதனைக் கடிக்காத போது அதை மனிதனின்விரோதி என்று அழைப்பானேன் ? வீட்டு ஈயின் கால் நகங்கள் மெத்தென்ற அதன் பாதங்கள், உடல் இங்கெல்லாம் ஏராளமான ரோமங்கள் உள்ளன. இதன் நாக்கில், ஒட்டிக்கொள்ளும் பசை போன்ற ஒரு வகைப் பூச்சு இருக்கிறது. புழுதி அழுக்கு இவை எளிதில் வீட்டு ஈயின் உடலில் ஒட்டிக் கொள்ள வசதியாக இவை இருக்கின்றன. தன் உணவுக்காக வீட்டு ஈ எங்கும் எதிலும் போய் உட்காரும் போது நோய்க் கிருமிகள் இதன் உடலில் மிக எளிதாகத் தொற்றிக் கொள்ளுகின்றன. இவற்றோடு இது நாம் சாப்பிடும் ஆகாரத்தின் மீதும் உட்காருவதினால் நாம் பல்வேறு நோய் அவதிகளுக்கு ஆளாகிறோம்.



ரமணி பம்பாய் போகிறான்

கி. முத்துசாமி

காலை நாலரை மணிக்கெல்லாம் எழுந்திருந்து ஓட்டை சைக்கிளில் ஏறிப் போய்ப் பால் வாங்கி வந்துவிட்டுப் பின் பேப்பர் ஏஜண்டிடம் போய் எல்லாக் கட்டுக்களையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வீடு வீடாய்ப் போட்டுவிட்டு மறுபடி ஆறரை மணிக்கு வீடு திரும்பி நாலைந்து சின்னப் பையன்களுக்குத் தனக்குத் தெரிந்தவரை 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்துவிட்டு... அப்புறம் அம்மாவுக்குக் கூடமாட ஒத்தாசையாக வீட்டு வேலை செய்து கொடுத்துக் கொண்டு. அதற்கப்புறம் பள்ளிக் கூடத்துக்குப் போய்....

இந்த வாழ்க்கையே சலித்துப் போய் விட்டது ரமணிக்கு.

'இதிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்காதா?' என்று புலம்பியது அவன் உள்ளம்.

'நான் வாழ்வது யாருக்காக?' என்று கேள்வி ஒன்றை எழுப்பி, 'பானுவுக்காக' என்று அவனே பதிலும் சொல்லிக் கொள்வான்.

பானு அவனுடைய ஒன்பது வயதுத் தங்கை. எழில் மிகுந்த முகம், துடிப்பான விழிகள், கூர்மையான அறிவு - ஆண்டவன் அவளுடைய கால்களைத் தான் ஊனமாகப் படைத்துவிட்டான்.

''அதோ பாரு நொண்டி.... நொண்டிப் பானு.... ஓடறா பாரு...!''

சிறுவரும் சிறுமியரும் 'நொண்டி நொண்டி' என்று கேலி செய்வார்கள். ரமணி ஓடி வருவான். அவனைக் கண்டதும் எல்லோரும் ஓடிவிடுவார்கள்.

''பானு! யார் எதைச் சொன்னாலும் கவலைப்படாதே. உனக்கு ஆண்டவன் கொடுத்திருக்கிற மாதிரி யாருக்காவது அறிவைக் கொடுத்திருக்கானா? , அவங்களுக்கெல்லாம் கால் ரொம்ப நல்லாத்தான் இருக்கு. மூளை? அதுதான் நொண்டியாயிடுச்சு?'' என்று அவளைச் சமாதானப்படுத்துவான் ரமணி.

பானுவின் பாசம்தான் ரமணியைக் கட்டி வைத்திருந்தது. பானுவின் ஒளிச் சிரிப்பில் வாழ்க்கையின் கஷ்டங்கள் பனித்துளியாய் ஒடுக்கண்டான் ரமணி.

''ரமணி! நாளைக்கு நம்ம பம்பாய் மாமா வர்றார். இதோ பாரு. லெட்டர்......'' என்றாள் பானு.

அவர், அம்மாவுக்குத் தூரத்து உறவு. எப்போதாவது சென்னை வருவார்.

மாமா மறுநாள் வந்ததும் வராதது மாய்ப் பம்பாயின் அழகையும் அங்கு அவர் எப்படிச் சுகமாக வாழ்கிறார் என்பதையும் ரமணிக்குச் சொன்னார். தன்னுடைய சுகத்தை மற்றவர்களுக்குச் சொல்வதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி.

''ஏண்டா, ரமணி... நீ பாம்பே வந்துடேன். ஜாலியா ராஜா மாதிரி வாழலாம். நீ இவ்வளவு கஷ்டப் பட வேண்டியதில்லை.... ஏதாவது ஒரு வேலை நான் பிடித்துத் தருகிறேன். நீ வா.... வேலையா இல்லை?'' என்றார்.

'இந்த ஓட்டைச் சைக்கிளுக்கு ஒரு கும்பிடு.... நியூஸ் ஏஜண்டுக்கு ஒரு கும்பிடு.... ஆட்டுக் கல்லுக்கு, அம்மிக்கு, அம்மாவுக்கு ஒரு கும்பிடு! இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தவன், 'பானுவுக்கு....' என்றான். அவளுடைய பாசம் நினைவுக்கு வந்ததும் ஒரு தயக்கம்.

பம்பாய் போகும் ஆர்வத்தில் பானுவை இப்போது மறக்கவே முயற்சித்தான் ரமணி.

இன்னும் நான்கே நாட்கள்தான் சென்னை வாழ்க்கை. அப்புறம் மாமா புறப்பட்டுவிடுவார். அவரோடு ரமணியும் புறப்பட்டுவிடுவான். பெட்டி, படுக்கைகளை ஒழுங்கு செய்தான். சட்டை, டிராயர், பனியன்களையெல்லாம் சோப்புப் போட்டுத் துவைத்துக் காய வைத்தான். சிலவற்றைக் கச்சிதமாக மடித்தான்.

அம்மா இந்தக் காட்சிகளையெல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



'எங்கே இருந்தாலும் உழைக்க வேண்டும், அப்போதுதான் வாழ முடியும். எங்கே வாழ்ந்தாலும் எளிமையாக வாழ வேண்டும், அப்போதுதான் முன்னேற முடியும்' என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அதை இப்போது ரமணியிடம் சொன்னால் கேட்பானா?

ரமணி செய்து கொண்டிருக்கும் ஆயத்தங்களை பானுவும் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

''ரமணி அண்ணா எங்கே போகப் போகிறாய்?'' பானு கேட்டாள்..

''பம்பாய்க்குப் போறேன்!'' இப்படி அலட்சியமாய்ச் சொல்லி விட்டு அவன் வேலையில் கருத்தாய் இருந்தான். 'இந்த நித்தியக் கஷ்டத்திலிருந்து விடுதலை பெற வேண்டும்' அவ்வளவுதான் அவன் நினைவு.

நாளைக்குத்தான் ரமணி பம்பாய் புறப்படுகின்ற நாள்.... சாயங்காலம்-மாமா வெளியே போயிருந்தார். ரமணி வீட்டுத் திண்ணையில் சட்டை ஒன்றைத் தைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பானு தெருவில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

''ஏய்... நொண்டி, பானு... உன் ரமணி பம்பாய் போகப் போகிறான். இன்னமே உன்னை உதைச்சால் யாரும் எங்களை ஒண்ணும் செய்ய முடியாதே.''

வழக்கத்துக்கு மாறாகப் பெருங் கூட்டம்; கைதட்டி ஆரவாரம் செய்தார்கள் சிறுவர், சிறுமியர்.

''ஐயோ... அண்ணா... அம்மா! என்னைக் கிண்டல் செய்யறாங்க, பாருங்க'' என்று அழுதாள் பானு. ரமணி கல்லாக இருந்தான். கண்களைக் கசக்கிக் கொண்டே உள்ளே போனாள் அவள். கேலிக் குரல்கள் இன்னும் ஓயவில்லை.

மறுநாள்.

''ரமணி புறப்படு. வண்டிக்கு நாழியாயிடுச்சு!'' துரிதப்படுத்தினார் மாமா.

''மாமா, நான் பாம்பே வரலே.... நீங்க போய் வாங்க!''

அமைதியாகச் சொன்னான் ரமணி.

''என்னடா இது, பைத்தியக்காரன் மாதிரிப் பேசறே?''

''இல்லே மாமா. நான் இல்லாட்டி என் தங்கை பானுவை 'நொண்டி நொண்டின்'னு எல்லாரும் கேலியும் கிண்டலும் பண்ணி அவளை அழ வைச்சுப் பைத்தியமாவே ஆக்கிடுவாங்க. அவ அழுது அழுது செத்தே போயிடுவா. அவளுக்காக நான் இங்கேயே இருந்துதான் ஆகணும்.'' என்றான் ரமணி.

பாசம் மிகுந்த உண்மையான இதயத்திலிருந்து சொற்கள் தங்கு தடையின்றி ஓடிவந்தன.

பம்பாயில் சுகமாக வாழலாம், ஆனால் பானுவின் ஆனந்தச் சிரிப்பைப் பார்க்க முடியுமா?




ஒட்டைச் சிவிங்கி

ஒட்டைச் சிவிங்கிக்கு ஆங்கிலத்தில் Girafee என்று பெயர். இது அராபிய மொழியின் ஸாராஃபா என்பதலிருந்து வந்தது. ஸாராஃபா என்ருல் சாதுவான பணிந்து போகக் கூடிய என்று பொருள். குட்டி போட்டுப் பால் கொடுக்கும் இனத்தில் ஒரே மாதிரி விரல்களோடு கூடிய குளம்புள்ள வகையைச் சேர்ந்தது இது. மான், ஆடு, மாடு, பன்றி இவை இந்த வகையைச் சேர்ந்தவைதான். உணவைக் கடித்து மென்று தின்னக் கூடியவை.

இவை ஒரு காலத்தில் சஹாராவுக்குத் தெற்கே உள்ள ஆப்பிரிக்கக் கண்டமெங்கும் காணப்பட்டன. இன்று ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென்முனைப் பகுதியில் இவை காணப்படுவதில்லை. அடர்ந்தகாடுகளில் இவை வசிப்பதில்லை. சிதறிய நிலையில் வளர்ந்துள்ள மரங்கள் உள்ள பகுதியிலேயே வாழுகின்றன. இதன் நீண்ட கால்களும் கழுத்தும் அடர்ந்த கானகங்களில் இவை வாழ்வதற்கு ஏற்றவையாக இல்லை.

மிருகங்களிலேயே மிக உயரமானது ஒட்டைச்சிவிங்கி. இதன் உயரம் தரையிலிருந்து தலை உச்சிவரை பதினெட்டு அடிகள் வரை இருக்கும். இதற்குக் குரலே கிடையாது என்று கூறுவார்கள். ஆனுல் இது சில வேளைகளில் மிகச் சன்னமான ஒலியை எழுப்பும். இதன் முன்னங் கால்களின் உயரம் பத்தடி பின்னங் கால்கள் ஆறடி உயரம் உடையவை. இதன் சராசரி நிறை 1100 பவுண்டுகள். ஆண், பெண் இரண்டுக்குமே குட்டையான கெட்டியான இரு கொம்புகள் உண்டு. இவை தோலினுல் மூடப்பட்டிருக்கும். கண்களுக்கு மத்தியில் ஒரே ஒரு கொம்புள்ள ஒட்டைச் சிவிங்கிகளும் உண்டு. இவற்றின் காதுகள் பெரியவை. மூக்குத் துவாரம் வெட்டுவாய் போல, விரும்பும்போது மூடிக் கொள்ளும்படி அமைந்திருக்கும். இளந்தளிர்களேயும் இலைகளேயும் இழுத்துப் பறிக்க ஏற்ற வகையில் இதன் உதடுகளும் நாக்கும் உள்ளன. நாக்கு மிக நீளமானது. உறுதியான தசைகளால் ஆன நீண்ட தலை. பெரிய கண்கள், வெகுதூரத்தில் உள்ள சிறிய பொருளேயும் காணும் சக்தி வாய்ந்தவை. கறுப்பான பிடரி மயிர் உண்டு. வாலின் நுனியிலும் கறுப்பான ரோமக்கத்தை உண்டு. வாலின் நீளம் இரண்டரை அடிகள்.

எல்லாப் பாலூட்டிகளுக்கும் உள்ளது போல் இதன் கழுத்திலும் ஏழு எலும்புகள் (Vertbra) உள்ளன. ஆனுல் இந்த எலும்புகள் ஒவ்வொன்றும் ஒன்பது அங்குல நீளமுடையவை. இதன் தோள் மிக உறுதியானது. உடலின் பின் பகுதியைவிட வலுவோடு அமைந்திருக்கின்றன. முன்னங்கால்கள் பலமான தசைநார்களால் இயக்கப்படுகின்றன. இதன் கால்கள் நீளமானவை. மெலிந்திருந்தாலும் ஒட்டைச் சிவிங்கிகள் மிக வேகமாக — மணிக்கு முப்பது மைல் வரை — ஓடக்கூடியவை. இதன் பாதத்தில் பிளவுபட்ட நிலையில் ஒரே மாதிரியான இரு குளம்புகள் இருக்கும். ஒட்டைச் சிவிங்கிகள் சிறு சிறு கூட்டங்களாக வாழக் கூடியவை. இதில் ஓர் ஆண் பல பெண்களும் குட்டிகளும் காணப்படும். வரிக்குதிரை, மான்கள், நெருப்புக் கோழி ஆகிய பிராணிகளுடனும் கலந்து வாழும் குணமுடையது. இலைகளே இதன் உணவு. முக்கியமாக அக்காஷியா என்ற மரத்தின் இலைகளே ஆவலுடன் உண்ணும். மேஜை மீது உணவை வைத்து நாம் உண்ணுவது போல, உயரமான இப்பிராணிகள் மரங்களின் மேலாக உள்ள தளிர்களே உதட்





டாலும் நாக்கினாலும் சுருட்டி வளைத்துப் பறித்துச் சாப்பிடும். கீழ்த் தாடையில் உள்ள பற்கள் இலைகளை வெட்டிக்கடிக்க உதவுகின்றன. உயரமாக இருப்பதினால் நெடுந்தூரத்துக் காட்சிகளையும் காண முடியும். காதுகளை முன்னும் பின்னும் இயக்க முடியும். எல்லாத் திசைகளிலிருந்தும்வரும் ஒலிகளைக் கிரகிக்கும் ஆற்றல்மிக்கவை.

இது ஓடும்போது பார்க்க விநோதமாக இருக்கும். ஓடும்போது ஒரு பக்கத்தின் இரு கால்களும் சேர்ந்தாற் போல இயங்கும். இதன் நீண்ட கழுத்துக்கு அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ளும் சக்தியுண்டு. கீழே உள்ள உணவை எடுக்கவோ நீர் அருந்தவோ வேண்டுமானால் இது தன் முன்னங்கால்களை அகல விரித்த படியோ அல்லது முழங்கால்களை மடக்கியோதான் குனியும். நீண்ட நாட்களுக்கு நீர் அருந்தாமல் வாழக்கூடிய வல்லமை பெற்றவை. ஒட்டைச் சிவிங்கிக்கு நீந்தத் தெரியாது. தண்ணீரைக் கண்டாலே ஒதுங்கிப் போய்விடும். இவை நதிகளை நீந்திக் கடப்பதை யாரும் பார்த்ததில்லை. அவசியமானால் குறிப்பிட்ட ஆழம் வரை நீருக்குள் நடந்தே செல்லும்.


இவை சாதுவான பிராணிகள். மூர்க்கக் குணமுடையதல்ல. ஆபத்தான பிராணியும் அல்ல. ஆனால் தற்காப்புக்காகப் போரிடும் போது இதன் கால் உதை பயங்கரமாக இருக்கும். முன்னங் கால்களை உயர்த்தி குளம்புகளால் தாக்கும். அநேகமாக இது ஒரு தடவைக்கு ஒரு குட்டிதான் போடும். சில வேளைகளில் இரட்டையாகவும் பிறப்பதுண்டு. குட்டி பிறக்கும்போது தலையிலிருந்து வால் வரை ஆறடி நீளம் இருக்கும். ஆரம்பத்தில் அம்மாவின் கூடவே எங்கும் போய்க்கொண்டிருக்கும். அதன் வயதொத்த பல குட்டிகள் சேரும் போது ஒன்றோடொன்று சேர்ந்து விளையாடும். மரங்களின் மேலாக உள்ள இலைகளை ருசித்துப் புசிக்கும் பழக்கத்தையும் இவை ஒன்றுக்கொன்று கற்றுக் கொடுக்கும். இடையிடையே தாயாரும் உதவிக்கு வருவாள். ஒரு வருஷத்துக்குள் குட்டி வளர்ந்து பருவமடைந்துவிடும். இதன் வாழ் நாள் இருபத்தைந்திலிருந்து முப்பது வருடங்கள்.


ஒட்டைச் சிவிங்கிகளில் பல வகை உண்டா? பொதுவாக ஒன்றுதான் இருப்பதாகத் தோன்றினாலும் இதன் உடலில் உள்ள கோலங்களைக் கொண்டு பல பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் வகுத்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர். ஆப்பிரிக்காவின் வடக்குப் பகுதிகளில் —சோமாலியா, வடக்குக் கென்யா— வாழும் இனத்துக்கு உடலின் கோலங்கள் ஒழுங்கான முனைகளையும் குறுகலான இடைவெளியும் கொண்டவை. தென் பகுதிகளில் வாழும் இனத்துக்குப் பழுத்த உடலில் பெரிய பெரிய புள்ளிகளாகக் காணப்படும். இப் புள்ளிகள் கோணல் மாணலான இடைவெளிகளோடும் காணப்படுகின்றன.

ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப் படும் இம்மிருகத்துக்குச் சிங்கங்களினால் அபாயம் உண்டு. புல் அடர்ந்த பகுதிகளில் சிங்கங்கள் பதுங்கி வருவதை உயரமான கழுத்துடைய இது வெகு எளிதில் கண்டு கொள்ளும். குட்டிகள் தான் சிங்கத்திடம் சிக்குமே தவிர நன்கு வளர்ந்த ஒட்டைச்சிவிங்கி அநேகமாக சிங்கங்களிடம் சிக்குவதில்லை. இதன் கால் குளம்புகளின் ஓர் அடியிலேயே வல்லமை பெற்ற சிங்கம் பரலோகப் பிராப்தி அடைந்துவிடும்.

பலே பாலுவும் பாட்டில் பூதமும் 6

கதை: வாண்டுமாமா — சித்திரம்: செல்லம்




பாலுவுக்கு கூடாரமடிக்க நல்ல இடமில்லை.
பாலு சார்! வாங்கோ..ஒன் லேட்டு?
ஓ.. உங்க வேலைதானு இது? என் கூடாரத்தை விரிக்க நல்ல இடமில்லே..ம்.
படாதாகள். இதோ மெத்தென்று மேடை தயார் செய்து தருகிறேன்.
அடப்பாவி! ஒரே வீச்சில் வைக்கோல் போரின் முடி ஒடுகிறதே!
பிரபுவே மெதுவாக ஏறிக் கூடாரத்துக்குப் போங்கள்.
பாலுவைப் பழி வாங்கவே முடியாது போலிருக்கே... நல்ல அதிர்ஷ்டசாலி.
அன்றிரவு மழை கொட்டுகிறது.
பாலுவுக்குக் கூடாரம் அடிக்க இடமில்லாமல் செய்ய நினைத்தோம்... இப்பு அவன் 'ஹாய்' யாகத் தூங்கறன்... நாமோ தீழே இப்படி.....ம்...
காலையில்...
சீனு அதென்ன சோளக்கொண்டையா? அதை வீசிட்டு வாடா இங்கே. கமகமன்னு இட்டிலியும் பொங்கலும். என் ஷேர்தில் தயாரிச்சிருக்கான் எல்லாருமாச் சாப்பிடலாம்.
ராத்திரி பூராத் தூக்கமில்லேடா பாலு. பசி வேறெ.. குளிரும் கூட.
ஓட்டை உடைசல் வண்டிகளைக் கொண்டு ஷேர்தில் வக்கணையான ஒரு வாகனம் தயாரிக்கிறன்.
என் 'ஷேர்'ரோட ஐடியாவைப் பாத்தீங்களா? ஏய்! கோமாளி கோபு நீ குஷாலா தூங்கிக்கிட்டே வரலாம்.
என்ன இருந்தாலும் நம்ம பாலுவுக்கு ரொம்ப நல்ல மனசுடா!
தொடரும்

நாடும் மக்களும்—திபெத்

உலகத்தின் கூரை



பரமேசுவரன் தாத்தா கிட்டுவின் நீண்ட மூக்கைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். தன்னுடைய கூரான நீண்ட மூக்கையும் தொட்டுப் பார்த்துக்கொண்டார். பட்டுவின் அகலமான உள்ளங்கையையும் பாதங்களையும் பார்த்த போது அவர் முகத்தில் கவலைதான் கலந்தது. கிட்டுவும் பட்டுவும் தாத்தாவின் இந்த விபரீதமான வேதனைக்குக் காரணம் புரியாமல் திகைத்தார்கள்..

''சப்பை மூக்கும் சின்னக் கையும் காலும் இருந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும்?'' என்றார் தாத்தா.

''எதற்காகவாம்?'' என்றார்கள் கிட்டுவும் பட்டுவும் ஏககாலத்தில்.

''கடல் மட்டத்துக்கு மேலே இரண்டு மைல் உயரத்துக்குப் போவதென்றால் இந்த மூக்கும் கையும் காலும் உதவாதே'' என்றார் தாத்தா.

''அத்தனை உயரத்தில் எந்த நாடு இருக்கிறது போவதற்கு?'' என்றாள் பட்டு. பூகோளத்தில் அவள் பூஜ்யம் என்று கிட்டு அடிக்கடி கிண்டல் செய்வது உண்மைதான் போலிருக்கிறது என்று எண்ணினார் தாத்தா.

''உலகத்தின் கூரை மீது ஏறி உட்கார்ந்து கொள்ளப் போகிறீர்களாக்கும்'' என்று கண் சிமிட்டினான் கிட்டு.


''கடல் மட்டத்துக்கு மேலே பதினாயிரம் அடி உயரத்தில் வாழும் திபெத்தியர்களைக் காணப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?'' என்று கேட்டார் பரமேசுவரன் தாத்தா.

''உலகத்திலேயே மிக உயரமான இமயமலைப் பகுதியில் வாழும் திபெத்தியர்களை அதுவும் நம் அண்டை நாட்டவர்களான அவர்களைக் காணத்தான் வேண்டும். ஆனால்...'' என்று இழுத்தான் கிட்டு.

''கவலைப்படாதே. அங்குள்ள கடுங் குளிரைத் தாங்குவதற்கு ஏற்ற கெட்டியான கம்பளி ஆடைகளை யெல்லாம் தயார்செய்துவிட்டேன்'' என்று கூறிய படியே தமது மந்திர மெழுகை எடுத்துக் கிட்டு, பட்டுவின் புருவத்தில் தடவினார் தாத்தா. அடுத்த விநாடியே அவர்கள் மூவரும் இமய மலையின் ஒரு சிகரத்தின் மீது நின்றுகொண்டிருந்தார்கள்.

''இதுதான் திபெத்து, நாம் நின்று கொண்டிருக்கிறோமே, இதற்குத் தெற்கே கங்கைச் சமவெளி. அங்கு வெப்ப நிலை அறுபது. டிகிரிக்குக் கீழே இறங்குவது அபூர்வம். அப்படியொரு வெப்பமான பகுதி. வடக்கே திபெத்தில் — வருஷத்தில் ஆறு மாதங்கள் ஒவ்வொரு நாள் இரவிலும் வெப்ப நிலை உறை நிலைக்குக் கீழே போய்விடும். இத்தனைக்கும் திபெத்தின் தலைநகரான லாஷாவுக்கும் கங்கைச் சமவெளிக்கும் ஒரு நேர் கோடு இழுத்தால் இருநூறு மைல்கள்தான் இடைவெளி. அங்கு அப்படி, இங்கு இப்படி! மலை, மலை, மலை...! எங்கும் மஞ்சு மூடிய மலைகள். இடையிடையே பசுமை. எத்தனை கண் கொள்ளாக் காட்சி பார்த்தாயா?''

''திபெத்துக்குள் யாருமே போக முடியாது — கூடாது என்று ஒரு காலத்தில் இருந்ததில்லையா?'' என்று கேட்டான் கிட்டு.



''மர்மங்கள் நிறைந்த தேசம் என்றே இதற்குப் பெயர். இங்கு வெளிநாட்டவர் யாரும் பல நூற்றாண்டுகளாக அதிகம் நுழைந்ததில்லை. ஏன், பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை திபெத்தியர்களேகூட அதன் தலைநகரான லாஷாவுக்குள் அனுமதிக்கப்பட்டதில்லை. அப்படியொரு கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தும் மக்கள் திபெத்தியர். சமாதானத்தை விரும்பும் சாதுவான மக்கள். திபெத்தியர்களின் ராஜாவுக்கு என்ன பெயர் தெரியுமா?''

''தெரியுமே. தலாய் லாமா. இவர் அரசர் மட்டுமல்ல. இந்த மக்களின் கடவுளும் கூட.

''தலாய் லாமாவை இவர்கள் தேர்ந்தெடுப்பது எப்படித் தெரியுமா? திபெத்தில் பிறக்கும் எந்தக் குழந்தையும். அது எவ்வளவு ஏழையாக இருந்தாலும் கூட மன்னராவதற்கான வாய்ப்பு உண்டு. ஒரு தலாய் லாமா இறந்ததும் அவரது ஆவி அதே நேரத்தில் அந்த நாட்டில் பிறக்கும் ஒரு குழந்தையின் உடலில் புகுந்துகொள்ளும் என்று நம்புகிறார்கள் திபெத்தியர். பிரதம மதகுரு இத்தகைய குழந்தை எங்கு பிறந்திருக்கிறதென்று தேடுவார். அவருக்கு அதற்கான சில அறிகுறிகள் தோன்றும். அதன்படி, தேர்ந்தெடுக்கப்படும் குழந்தைதான் அந்த நாட்டின் மன்னரும் ஆண்டவனுமாக மதிக்கப்பட்டு லாஷாவில் உள்ள மிகப் பெரிய அரண்மனையில் வாழும் தகுதியைப் பெறும். அறுநூறு ஆண்டுகளாகத் தலாய் லாமாக்கள் இந்த முறையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.''

''ஆசியாவின் மிகப் பெரிய நதிகளின் உற்பத்தி ஸ்தானம் திபெத்துதான். தென் கிழக்கில் சிந்து, பிரம்மபுத்திரா, வடகிழக்கில் யாங்ட்ஸி, மெகாங், ஸால்வின் ஆகிய நதிகளின் உற்பத்தி ஸ்தானம் இங்குதான். இந்த நாட்டைச் சூழ்ந்து உலகின் மிகப் பெரிய மலைகள் இருப்பதால் பிற நாட்டவர்கள் உள்ளே சுலபமாக வர முடியாது. சீனர்கள் இந்த நாட்டை விழுங்கும்வரை இது மாசற்றதாக, உலகின் பிற தேசங்களுடன் தொடர்பற்றதாக, நாகரிகத்திலும் கலாசாரத்திலும் தனித்தன்மை உடையதாக இருந்தது.''

''சீனாவை விட இந்தியாவோடு திபெத்துக்கு அதிக உறவு உண்டில்லையா?'' என்று கேட்டாள் பட்டு.

''திபெத்தியர்களின் மதம் புத்த மதம். அது இங்கிருந்து போனது தானே? சீனர்களின் ஆக்கிரமிப்புக்கு முன்புவரை இங்கு சக்கரம் கொண்ட வாகனங்களே கிடையாது. போக்குவரத்து மிருகங்களின் மூலம்தான். சாலைகள் கரடு முரடாகவும், குறுகலாகவும் இருக்கும். பெரிய நதிகளின் மீது பாலங்கள் கிடையாது.''

''சீனர்கள் திபெத்தை ஆக்கிரமித்தது 1950ல்தானே தாத்தா? அவர்கள்தான் இந்த நாட்டின் தனிமையையும் இனிமையையும் தூய்மையையும் கெடுத்தவர்கள் இல்லையா? மோட்டார் வாகனங்கள் செல்லக் கூடிய பல நூறு மைல்களுக்கான சாலைகளைப் போட்டுச் சீனாவோடு திபெத்தை இணைத்தார்கள் இல்லையா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஆமாம்... ஒரு வகையில் அந்த நாட்டில் நாகரிகத்தைப் புகுத்தினாலும் அவர்களுடைய அமைதியான சந்தோஷமான வாழ்க்கையைப் பாழடித்து விட்டார்கள். திருப்தியோடு வாழ்ந்து வந்தவர்களைப் பசியும் பற்றாக்குறையுமாக அல்லல்பட வைத்து விட்டார்கள்.''





தற்போது இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள பூஜ்யர் தலாய்லாமா,

''திபெத்தில் சமவெளி கிடையாதா தாத்தா? எல்லாம் மலைப் பிரதேசம் தானா?'' என்றாள் பட்டு.

''ஏன் இல்லாமல்? திபெத்தின் தென் பகுதியில் விளைச்சல் நிலங்கள் உள்ளன. பள்ளத்தாக்குப் பகுதிகளில் பார்லி, கோதுமை, பட்டாணி, பீன்ஸ் முதலியவை பயிராகின்றன. வில்லோ, பாப்லார், வால்நட், அப்ரிகாட் ஆகிய மரங்களும் இங்கு உண்டு.''

''திபெத்தின் ஜனத்தொகை எவ்வளவு தாத்தா?'' — இது பட்டு.

''சீனர்களின் ஆக்கிரமிப்புக்கு முன்பாக ஜனத்தொகை மூன்று மில்லியன். இடையர்கள், குடியானவர்கள், நாடோடிகள், பிரபுக்கள் எல்லா வகையினரும் இங்கு உண்டு. எங்கும் புத்த பிட்சுக்களையும், லாமாக்களையும் காணலாம்.'' மலைப் பாதையில் நடந்தபடியே விளக்கிக் கொண்டு வந்த தாத்தா கிட்டுவும் பட்டுவும் ஏதோ அவஸ்தைப்படுவதைக் கவனித்தார்.

''நான் அப்போதே நினைத்தேன்.'' என்றார்.

''எதை?'' என்றான் கிட்டு திணறிய படியே.

''உங்களுக்கு மூச்சு அடைக்கிறதில்லையா? சுவாசிப்பது கஷ்டமாக இல்லை?'' என்று கேட்டார்.

''ஆமாம் தாத்தா... ரொம்ப நேரமாகவே எனக்கு இந்த அவஸ்தை. உங்களிடம் சொல்லுவதற்குப் பயமாக இருந்தது'' என்றாள் பட்டு திணறிய படியே.

''இதில் பயப்பட ஏதுமில்லை. கடல் மட்டத்துக்கு மேல் இரண்டு மைல் உயரத்துக்கு வந்திருக்கிறோமே. இங்கு காற்று இலேசாக இருக்கும். நம்முடைய இதயத்துக்குத் தேவையான பிராண வாயுவை அடைய இங்கு நாம் அதிகமாக ஆழ்ந்து சுவாசிக்க வேண்டியிருக்கிறது. இதனால் நாமெல்லாம் இங்கு வெகு விரைவில் களைப்படைந்து விடுவோம். தூங்க முடியாது. குறைவான காற்றை சுவாசித்து வாழ்வதற்கு நம் உடல் பழகிக் கொள்ளும்வரை இந்த அவஸ்தைதான். திபெத்தியர்கள் பல தலைமுறைகளாக இங்கேயே வாழ்ந்து வருவதனால் இந்தச் சூழலுக்கு ஏற்றபடி அவர்கள் உடல் பழக்கப்பட்டு விட்டது. நம்மைவிடத் திபெத்தியர்களின் இருதயமும் நுரையீரலும் பெரியவை.''

''அது சரி தாத்தா. இங்கு வருமுன் என் மூக்கையும் உங்கள் மூக்கையும் பற்றி ஏதோ சொன்னீர்களே அது என்ன?'' என்று கேட்டான் கிட்டு.

''அதுவா? சற்று முன்பு நம்மைக் கடந்து சில திபெத்தியர்கள் போனார்களே பார்த்தீர்கள் அல்லவா? எப்படி இருந்தார்கள்?''

''கட்டக் குட்டையாக, திடகாத்திரமானவர்களாக இருந்தார்கள்.''

''நம் உடலில் எந்தப் பகுதி விரைவில் குளிர்ச்சியடையக் கூடியது தெரியுமா?'' என்று கேட்டார் தாத்தா.

''ம்... வந்து...'' என்று விழித்தாள் பட்டு.

''இருதயத்திலிருந்து எந்தப் பாகம் தள்ளி இருக்கிறதோ, அதுதான்— அதாவது கால்களும் கைகளும். சரி; தானே தாத்தா?'' என்றான் கிட்டு.

''கரெக்ட். இதனால்தான் திபெத்தியர்களின் கையும் காலும் சின்னதாக இருக்கு.

''குளிர் நடுக்கும்போது உன் உடலின் எந்தப் பாகத்தை உன்னால் போர்த்திக் கொள்ள முடியாது?''





"மூக்கு, மூக்கு...!" என்று கத்தினான் பட்டு.

"மூக்கு மட்டுமல்ல — முகம் பூராவும்" என்றார் தாத்தா..

"திபெத்தியர்களின் முகமும் மூக்கும் சப்பட்டையாக இருக்கும். இதனால் அவர்கள் முகத்தைக் குளிர் அதிகமாகத் தாக்காது. அதுமட்டுமல்ல. கண்களுக்கு மேலேயுள்ள சதை தொங்கிக் கண்களை பாதி மறைத்துக் கொண்டிருக்கும். இது கடுமையான குளிரிலிருந்து கண்களைப் பாதுகாப்பதற்காகத்தான்."

"எல்லாத் திபெத்தியர்களுமே இப்படித்தான் இருப்பார்களா தாத்தா? சற்று முன்பு நாம் சந்தித்தவர்களில் உயரமாகவும் சிலர் இருந்தார்களே?" என்றான் கிட்டு.

"உயர் குடியில் பிறந்த சீமான்கள், நாடோடி இனத்தவர் ஆகியோர்தான் அவர்கள். வட மேற்குப் பகுதியிலும் மத்தியப் பகுதியிலும் வளமுள்ள பிரதேசங்களில் வாழும் கிராமத்தவர் குட்டையாகவும் கட்டையாகவும்தான் இருப்பார்கள். எல்லா திபெத்தியர்களுக்குமே முடி கருகருவென்று இருக்கும். கண்களும் கறுப்பு. ஆலிவ் வண்ண உடல். திபெத்தியர்கள் தன்னம்பிக்கை மிக்கவர்கள், அன்பு உள்ளமும் நேர்மையும், சந்தோஷமும் ரசிகத் தன்மையும் கொண்டவர்கள்."

இவர்கள் போய்க் கொண்டிருக்கும் போது தூரத்தில் ஒரு மிருகம் கறுப்பாகப் புல் மேய்ந்து கொண்டிருந்தது. எருமையைப் போல் தோன்றினாலும், அது எருமையாக இல்லை. "தாத்தா... அது...." என்றார்கள் வார்த்தையை முடிக்காமல் கிட்டுவும் பட்டுவும்.

"அதன் பெயர் யாக் (yak) திபெத்தியர் மதிப்பு மிக்கதாகக் கருதும் காளை மாடு இவை. இத்தனை கடுமையான

குளிர்ப் பிரதேசத்திலும் சந்தோஷமாக உழைக்கும் குணமுடையவை இந்த யாக்குகள். இதன் உடலின் இரு பக்கத்திலும் அடர்த்தியான ரோமம், தாடியைப் போல வளர்ந்து தொங்குகிறதல்லவா? கடுங் குளிரிலிருந்து இந்த மிருகத்தைக் காப்பது அதன் மேலுள்ள அபரிமிதமான ரோமம்தான். போக்குவரத்துக்கு மிக உபயோகமானதோடு, இறைச்சி, பால், வெண்ணெய், கம்பளி இவைகளையும் யாக் மூலம் பெறுகிறார்கள் திபெத்தியர்.''

''இந்த 'யாக்'கைளத் தவிர வேறு பிராணிகள் இங்கு ஏதும் கிடையாதா, தாத்தா?''

''ஆடுகளையும் கழுதைகளையும்கூட மந்தை மந்தையாக வளர்க்கிறார்கள் திபெத்தியர்கள். மிக அதிகமாக அருந்துவது தேயிலைப் பானம். அடிக்கடி டீ குடிப்பார்கள். ஒரு நாளைக்கு ஐம்பது கோப்பைக்கும் மேல் டீ குடிப்பது சர்வ சகஜம் இங்கே. மரம் அதிகமாகக் கிடைக்காததனால், திபெத்தியர்கள் தங்கள் வீடுகளைக் கூடாரங்களாக அமைத்துக் கொள்ளுகிறார்கள். இந்தக் கூடாரத் துணி கம்பளிகளை அடுக்கடுக்காக ஒன்று சேர்த்து அழுத்தித் தயாரித்தது. இப்படிக் கூடாரங்களில் வாழுபவர் ஆடு மாடுகளை மேய்க்கும் கிராமவாசிகள்தான். இங்கு இவர்கள் தானே அதிகம்?''

''கைத்தொழிலில் எப்படிப்பட்டவர்கள் திபெத்தியர்?'' என்று கேட்டாள் பட்டு..

''உலோக வேலைப்பாடு, மரங்களைக் குடைந்து வேலை செய்தல், சித்திரம் தீட்டுதல், இவைகளிலும் வல்லவர்கள். கட்டிடக் கலையில் கெட்டிக்காரர்கள். தலாய் லாமாவின் அரண்மனைக்குப் பெயர் போடாலா (Potala) என்று பெயர். கட்டிடக் கலையின் சிறப்புக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.


''நாம் அந்த அரண்மனைக்குப் போய் பார்க்கலாமா தாத்தா?'' என்று கேட்டாள் பட்டு. ''இப்போதுதான் இங்கு தலாய் லாமா இல்லையே. சீனர்களின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு போடாலா பொலிவிழந்து போய் விட்டது. அது போகட்டும். இந்த அதிசய அரண்மனையைக் கட்டியது யார் தெரியுமா? ஐந்தாவது தலாய் லாமாவாக இருந்த லோப் ஸாங்கியாஸோ என்பவர். 1641ல் பட்டத்துக்கு வந்த இவர் சிறந்த அறிவாளி. இவர் காலத்தில்தான் இந்த அரண்மனை கட்டப்பட்டது. ஒரு மலையுச்சியில் கட்டப்பட்டுள்ள இந்த அரண்மனையின் நீளம் 900 அடிகள்.


சிரிக்கச் சிரிக்க..



பெரியவர்: ஏ, தம்பி! நீ எழுந்து இடம் கொடுத்தால் ஒரு மாமி உட்காரலாமே.

பையன்: உங்கள் தாராள மனசுக்கு நீங்கள் எழுந்து கொண்டால் இரண்டு பேருக்கும் இடம் கிடைக்குமே மாமா!





''லாமா என்றால் என்ன தாத்தா?'' என்று கேட்டாள் பட்டு.

''உயர்ந்தவர், மேலானவர், என்று பொருள். திபெத்தியர்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு புத்த பிக்கு இருப்பார். இங்கு 300க்கு அதிகமான மடாலயங்கள் இருக்கின்றன. சீனர்களின் ஆக்கிரமிப்புக்கு முன்னால் விளைச்சல் நிலங்களில் மூன்றில் ஒரு பாகம் இந்த மடாலயங்களுக்குத்தான் சொந்தமாக இருந்தன.

''கம்பளி, தோல் இவைகளைக் கொடுத்துவிட்டு தேயிலை, பீங்கான், பட்டு இவற்றைச் சீனாவிடமிருந்தும், அரிசி, சர்க்கரை, உலோகம், துணிகள் முதலானதை நம்மிடமிருந்தும் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.


''அதோ தெரிகிறது பாருங்கள் பளீரென்று ஒரு கட்டிடம், அதுதான் போடாலா அரண்மனை. நாம் தலைநகரான லாஷாவுக்கு வந்து விட்டோம்... அதோ ஒரு பெரிய ஊர்வலம் வருகிறது. திபெத்தியர்களின் வண்ண உடைகளையும் அலங்காரங்களையும் காண்பதற்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பு. பளீர் வர்ணங்களில் ஆடை அணிவதில் விருப்பம் உள்ளவர்கள் திபெத்தியர்கள். குடைகளும் கோலாகலமும் எப்படி? நம் ஊர்களில் தாரை என்று ஒரு வாத்தியம் நீளமாக இருக்கும். திருவிழாக்களின் போது வாயில் வைத்து ஊதுவார்கள், இல்லையா? அதே மாதிரி, ஆனால் பல மடங்கு பெரியதான ஒரு வாத்தியத்தை இவர்கள் ஊர்வலத்தின்போது ஊதுவார்கள்.

''என்ன, பசிக்கிறதா?... டீ குடித்துவிட்டு ஊருக்குத் திரும்பலாம். நடுப்பகல் ஆகப்போகிறது. கடுமையான ஊதல் காற்று வீச ஆரம்பித்து விடும்'' என்றார் தாத்தா.

''அது என்ன ஊதல் காற்று? நம்ம ஊர்ப் பக்கம்தான் அப்படி, இங்குமா?''

''நாலா பக்கமும் பனி மூடிய மலைகளிலிருந்து கடுமையான பனிக் காற்று வீசும். அதுவும் சூரியன் எப்போது உக்கிரமாக இருப்பானோ அந்த நண்பகலில். துர்திர்ஷ்டம்தான். லாஷாவில் நாலு பக்கமும் சுவருள்ள ஒரு கட்டிடத்தினுள் நீ இருந்தாயானால், உள்ளே வெப்ப நிலை 80 டிகிரியாகவும், வெளியே நண்பகலில் உறை நிலைக்குக் கீழேயுமாக இருக்கும். பனிக் காற்றின் நிலை அப்படி. சரி, சரி... சீக்கிரம் கிளம்புவோம் வாருங்கள்'' என்று, ஊர் திரும்பக் குழந்தைகளைத் துரிதப் படுத்தினார் தாத்தா.

''நான் பழங்காலத்து ஆமையில்லே. முயல் ஓட்டப் பந்தயத்துக்கு வரட்டும். அதை ஒரு கை பார்த்து விடுறேன்.''



''என்னிடம் ஒரு நயா பைசாக்கூட வாங்காமல் எனது நண்பன் இந்தக் காரை எனக்கு இலவசமாகக் கொடுத்தான்.''
''உங்கள் நண்பர் உங்களை ஏமாற்றி விட்டார்னு தோணுது சார்!''



''முதன் முதலில் பூமியைத் தோண்டிச் சுரங்கப் பாதைகளை உண்டாக்கியது யார்?''
''பெருச்சாளிகள் சார்!''





ஜெய் ஹனுமான் 25
கதை: ரா. கணபதி
சித்திரம்: விஜு
லங்கா தகனம் முடிந்து அனுமார் திரும்ப, திரிகூட சிகரத்துக்கு வந்து நிற்கிறார்.
என் பிறவிக்குணத்தின்படி யோசிக்காமல் இலங்கையைக் கொளுத்திக் இதாகசுப்பட்டேனே. அசோக வனத்தில் தேவி இருக்கிறாளே. அன்னைக்கு இந்தத் தீயினால் ஆபத்து ஏற்பட்டால்? ஐயோ!
அப்போது வானத்தில் சாரணர்கள் பேசிக் கொண்டு போகிறார்கள்.
சீதையின் மகிமையே மகிமை! இலங்கையை சூழ்ந்த தீ அன்னை இருக்கும் பகுதியை மட்டும் நெருங்கவே இல்லையே!
மன அமைதியுடன் திரிகூட மலையிலிருந்து கிளம்பிய அனுமார் முன்பு வாக்களித்தபடி மைநாக மலையில் சற்றே தங்கி மீண்டும் ககன மார்க்கத்தில் பறக்கலானார்.
கண்டேன் சீதையை!
என்று கூறியபடி மஹேந்திர மலையில் வந்து இறங்கிய மாருதியைக் கண்ட வானரங்கள் மகிழ்ச்சிக் கூத்தாடின.
வெற்றிக் களிப்பில் திரும்பிய வானரங்கள் கிஷ்கிந்தைக்கு வெளியே உள்ள மது வனத்தில் புகுந்து இஷ்டப்படி விளையாடி அதை அழித்தன.



மதுவனக் காவலனை அடித்து உதைத்து அலங்கோலமாக்கி விரட்டிவிட்டனர்.
மகாராஜா! இதோ உங்கள் பிரஜைகள் எனக்குச் செய்துள்ள அலங்கோலத்தைப் பாருங்கள். அவர்களைத் தக்கபடி தண்டிக்க வேணும்.
ஹ, ஹ, ஹா! தண்டனையா? வெகுமதியல்லவா வழங்க வேணும்!
பிரபு, மாருதி சீதாதேவியைக் கண்டு விட்டார். அந்தக் களிப்பின் பிரதிபலிப்புத்தான் அவர்கள் மதுவனத்தில் இப்படி விளையாடி இருக்கிறார்கள்.
கண்டேன் சீதையை...! இதோ அன்னை அளித்த அடையாளச் சூடாமணி.
நான் உடனே அவர்களைக் காண விரும்புவதாகச் சொல்லி அனுப்புங்கள்.
அனுமனிடமிருந்து சகல விவரங்களும் அறிந்த ராமர் இராவணன் மீது படையெடுக்க ஆயத்தப் படுத்தும்படி சுக்ரீவனுக்குக் கட்டளையிடுகிறார். வானரப் படை உற்சாகத்துடன் கிளம்புகிறது.
பிரபோ, இந்தக் கடலுக்கு அப்பால் தான் லங்காபுரி உள்ளது. அன்னை அங்கு சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். நாம் இந்தக் கடலைக் கடந்து போக வேண்டும்.

கண்களை நம்பாதே


தொகுப்பு-ஓவியம்
-A. தேவராஜ்-




X,Y கோடுகள் நடுவில் வளைந்து உள்ளனவா?




A,B,C,D கோடுகள் ஒன்றுக்கொன்று இலேசாக வளைந்து இருக்கின்றனவா?



இது ஒரு சரியானவட்டமா?




இதில் உயரம் அதிகமா? அகலம் அதிகமா?




இதில் எத்தனை கட்டைகள் உள்ளன?



இக்கோடு 6 சமபாகமாக பிரிக்கப்பட்டுள்ளதா?





AB, AC கோடுகளில் எது அதிக நீளமானது?

விடைகள்

1- இல்லை - XY யில் மட்டப்பலகையை வைத்துப்பார். 2- இல்லை, 3- சரியான வட்டமே, 4- உயரமும் அகலமும் சம அளவில் உள்ளன, 5- ஆறு கட்டைகள் உள்ளன பக்கத்தை தலைகீழாய் திருப்பிப் பார், 6- ஆறும் சம அளவிலே அளந்துபார், 7-8- AB, AC இரண்டும் ஒரே அளவு.

மந்திரக் கம்பளம் 15

வாண்டு மாமா

மங்களகிரியில் மறு நாள் கதிரவன் வெகு உற்சாகமாக உதயமானான். ஆனால் அரண்மனையில் கண் விழித்தவர்களிடம்தான் உற்சாகமில்லை. சொந்த இடத்தில் படுத்து எழுந்திருப்பவர்களுக்கே சில நாளைக்கு உற்சாகம் இருக்காது. விசித்திரபுரி மகாராஜாவும் மகாராணியும் படுத்திருந்ததோ, அந்நியர்களின் அரண்மனைப் படுக்கை அறையில். ஆகவே அவர்கள் எழுந்திருக்கும் போதே குழப்பமுடன்தான் எழுந்திருந்தார்கள். பிரதான சமையற்காரன் நள சர்மாவுக்கு, தான் இளவரசனாக முடியுமா முடியாதா என்ற குழப்பம். ஆனால் அவன் உறுதியாக இருந்தான். எப்படியும் அரசரின் அறிவிப்புப் படி இளவரசி மஞ்சுளாவைக் கல்யாணம் செய்து கொண்டுவிட வேண்டும் என்று!

மாணிக்கவர்மருக்கோ திடீர் விருந்தாளிகளாக வந்துள்ள மகாராஜாவும் மகாராணியும் இளவரசனும் எப்படியாவது அங்கிருந்து கிளம்பினால் போதும் என்ற கவலையுடனேயே கண் விழித்தார். மகாராஜாவுக்குத் தன் அரண்மனையில் இருந்தால்தான் வேலை ஓடும். ஆகவே அவர் விரைவில் விசித்திரபுரிக்குப் போய்விட விரும்பினார். அங்கு போன பிறகுதான் நளசர்மாவின் விஷயத்தில் மேற்கொண்டு தாம் ஒரு முடிவுக்கு வர முடியும் என்று அறிவித்தார்.

மாணிக்க வர்மர் மகா ராஜாவிடம் தமது அபிப்பிராயத்தைக் கூறினார். எல்லோரும் மந்திரக் கம்பளத்தில் அமர்ந்து வந்தது போலவே ககன மார்க்கமாக விசித்திரபுரி அரண்மனைக்குப் போய் விட வேண்டியது. இந்த யோசனைக்கு ராணி ரத்னாவதி இணங்கவில்லை. கம்பளத்தில் பறந்து வந்துங்கூட அவள் அந்த மாயமந்திரங்களை நம்பவோ ஏற்றுக் கொள்ளவோ தயாராக இல்லை. "மந்திரக் கம்பள்த்தில் பறந்து செல்வது சுத்த அசட்டுத்தனம். கௌரவம் மிக்க செயலுமில்லை. நான் ரதத்தில்தான் விசித்திரபுரிக்குத் திரும்பிச் செல்லுவேன். ஆகவே உடனே ஆறு குதிரைகள் பூட்டிய ரதம் தயாராகட்டும்" என்று ஆணையிட்டுவிட்டு அந்த நெடுந்தூரப் பிரயாணத்துக்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்ளுவதில் முனைந்துவிட்டாள். அவள் முடிவை யாராலும் மாற்ற முடியாது என்பதை அறிந்த மாணிக்கவர்மர் உடனே ரதத்துக்கு ஏற்பாடு செய்தார். சற்றைக்கெல்லாம் ராணி ரத்னாவதி விசித்திரபுரிக்குக் கிளம்பிவிட்டாள், யாரிடமும் விடைபெற்றுக் கொள்ளக்கூட இல்லை.

மந்திரக் கம்பளத்தில் மந்தஹாச மகாராஜாவும் இளவரசன் கீர்த்தியும் சமையல்காரன் நளசர்மாவும் பறந்து சென்று விசித்திரபுரியை அடைவது என்று தீர்மானமாயிற்று. மந்திரக் கம்பளம் அரண்மனையின் நிலா முற்றத்தில் விரிக்கப்பட்டது. அதில் மூவரும் சென்று அமர்ந்தார்கள். கீர்த்தி மறக்காமல் இரவு சில பொருள்களை வைத்து மூடிய பெட்டியை எடுத்துக் கொண்டான். மாணிக்கவர்மரும் — குந்தளவல்லியும் மற்றும் மந்திரி பிரதானிகளும் மன்னரையும் இளவரசரையும் வழியனுப்ப வந்து கூடினார்கள். குந்தளவல்லியிடம் தன் பார்வையினாலேயே விடைபெற்றுக் கொண்டான். அவள் முகத்தில் தவழும் அந்த மென்னகையோடு ஓர் ஏக்கமும் இழையோடுவதைக் கவனித்தான் கீர்த்தி. அது தன் பிரிவினால் ஏற்பட்ட தாபம் என்பதை உணர்ந்த போது அவன் நெஞ்சத்திலே உவகை பொங்கியது. மந்திரக் கம்பளம் 'ஜிவ்' என்று வானத்துக்கு எழும்பி மிதந்தபடி பறந்தது. பெரிய பாரம் இறங்கியது போல் ஆசுவாசப் பெருமூச்சுடன் அரண்மனைக்குள் சென்றார் மாணிக்கவர்மர். மறுபடி கீர்த்தியை எப்போது சந்திக்கப் போகிறோம் என்ற ஏக்கத்தினால் கனத்த நெஞ்சுடன் தன் இருப்பிடம் திரும்பினாள் குந்தளவல்லி.

ராணி ரத்தினாவதி விசித்திரபுரிக்கு ராஜபாட்டை மூலம் வந்து சேர நான்கு நாட்களாகும். ஆனால் மகாராஜாவும் இளவரசனும் நளசர்மாவும் நாலே மணியில் நலுங்காமல் போய்ச் சேர்ந்துவிட்டார்கள், மந்திரக் கம்பளத்தின் மகிமையினால்.

அரண்மனைக்குத் திரும்பிய உடனேயே அரசவையைக் கூட்டினார் மந்த

ஹாசர். மந்திரி பிரதானிகள் நாட்டுப் பெருங்குடி மக்களின் முன்னிலையில் அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும் பார்வைக்கு வைக்கப்பட்டன. 'அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்றதாகக் கூறும் நளசர்மாவும், இளவரசன் கீர்த்தி வர்மனும் தங்கள் தங்கள் வாதங்களைச் சபையின் முன்னால் கூறலாம் என்று சொல்லப்பட்டது.

முதலில் நளசர்மா தன்னுடைய உரிமையைக் கோரிக் குரல் எழுப்பினான். வக்கணையாகப் பேசுவதில் வல்லவன் அவன். சமையலறை வேலை நேரம் போக மற்ற போதெல்லாம் நகரில் ஆங்காங்கே நடக்கும் நாடகங்கள், தெருக் கூத்துக்களைக் கண்டு ரசிக்கும் வழக்கம் உடையவன் நளசர்மா. ஆகவே வித்தாரமாகப் பேசுவதில் சமர்த்தன்.

''அக்கினி அரக்கனை எப்படி எங்கே கொன்றேன் என்பதெல்லாம் உங்களுக்குத் தேவையற்ற விவரங்கள். அவைகளை நான் சொல்லப் போவதுமில்லை. மன்னர் பிரானின் அறிவிப்பில் பரிசும் பாணிக்கிரஹணமும், அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் கொண்டு வருபவருக்குத்தான் என்பது திட்ட வட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொல்பவருக்கு என்று குறிப்பிடவில்லை. தவிர அதைக் கொல்லாமல் அதன் கொம்பையும் வாலையும் எப்படிக் கொண்டு வரமுடியும்? ஆகவே கனம் சபையோர்களே, இதோ இருக்கும் இந்தக் கொம்புகளையும் வாலையும் கொண்டு வந்தவன் நான்தான் என்பது மன்னருக்குத் தெரியும். ஆகவே அவர் வாக்குப்படி எனக்குரிய பரிசுகளை வழங்குவார் என்றும் நம்புகிறேன்.''

நளசர்மாவின் நயமான பேச்சில் நியாயமிருப்பதாகச் சபையோரில் பலர் கைதட்டி ஆரவாரித்துப் பாராட்டினர். அவர்களுக்கெல்லாம் கீர்த்தியைப் பிடிக்காது. எப்படியாவது ஆட்சிப் பொறுப்பு அந்நியன்கையில் போனால் சரி என்று ஆசைப்படுகிறவர்கள் அவர்கள். பாவம் மஞ்சுளா. அவள் நளசர்மாவின் பேச்சையும், அவனுக்குக் கிடைத்த பாராட்டுக்களையும் கேட்டு 'கோ'வென்று கதறினாள். கீர்த்தியை அவளும் வெறுத்தாள் தான். ஆனால் அதற்காக நளசர்மாவைக் கணவனாக ஏற்க அவள் மனம் ஒப்பவில்லை.

இளவரசன் கீர்த்தி வர்மன் தன்னுடைய உரிமையை உறுதிப்படுத்த அழைக்கப்பட்டான். கீர்த்திக்கே உரிய கம்பீரத்துடன் எழுந்து நின்று அவையை ஒரு முறை பார்த்தான். பிறகு பேசலானான்.

''அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் கொண்டு வருபவர்களுக்கே பரிசும் பாவையும் என்ற நிபந்தனையை ஒப்புக் கொள்கிறேன். அதைக் கொல்கிறவர்களுக்கு என்று அரசர் குறிப்பிடவில்லைதான். ஆனால் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் எண்ணம் என்ன என்பதை இங்கு யோசிக்க வேண்டும். நாட்டுக்கும் மக்களுக்கும் தொல்லை தந்து வரும் ஒரு கொடிய மிருகத்தைக் கொன்று அழிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய எண்ணமே தவிர கொம்புகளையும் வாலையும் காண வேண்டும் என்கிற காரணத்தினாலா அப்படியொரு அறிக்கையைத் தயாரித்தார்? இல்லவே இல்லை. கொம்புகளும் வாலும் மட்டுமானால் எத்தனையோ பேர் வண்டி வண்டியாகக் கொண்டு வந்து குவிப்பார்களே! நளசர்மாவின் வாதத்தை ஏற்றுக்கொள்வதானால் மகாராஜாவினுடைய அறிவிப்பின் உண்மையான அவசியம் அலட்சியப்படுத்தப்பட்டதாகி விடும்...''

தம் மகனுடைய வாதத் திறமையைக் கேட்டு மந்தஹாஸர் மனத்துக்



குள்ளேயே 'சபாஷ் கீர்த்தி, சபாஷ்!' என்று பாராட்டினுர். சபையில் கீர்த்தியின் ஆதரவாளர்களும், அரச பரம்பரை அலங்கோலமாகி விடக் கூடாதே என்ற கவலை உடையவர்களும் கை தட்டிக் கீர்த்தியைப் பாராட்டினுர்கள்.


கீர்த்தி தொடர்ந்தான். ''அக்கினி அரக்கனைக் கொன்றவர்கள் யாராக இருந்தாலும் அது இருக்குமிடம் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். கொம்பும் வாலும் இழந்த அதன் கால் குளம்புகளை யார் கொண்டு வருகிருர்களோ அவர்களே அதைக் கொன்றவர்களாக இருக்க முடியும். அதன் குளம்புகளை நளசர்மா கொண்டு வந்தாராஞல் நிபந்தனைப்படி அவரே இந்நாட்டின் இளவரசராகலாம்'' என்ருன் கீர்த்தி.

இதைக் கேட்டதும் நளசர்மாவின் உடல் ஆட்டம் கண்டது. அக்கினி அரக்கனின் குளம்புக்கு அவன் எங்கே போவான்! குழம்பு பண்ணத்தான் தெரியும் அவனுக்கு. ''இதெல்லாம் வீண் வாதம்'' என்று அடம் பிடித்தான்.

மந்தஹாஸரின் பாடு திண்டாட்டமாகியது. பொறுப்பை மஞ்சுளாவின் மீது திணிக்க எண்ணி, ''இளவரசி மஞ்சுளா எப்படிச் சொல்கிருளோ அதன்படி செய்வோம்'' என்ருர். மஞ்சுளாவோ, 'ஓ' என்று பெருங்குரல் எடுத்து அழலானுள். மந்தஹாஸர் அவளது அழுகையைத் தாங்க முடியாதவராக ''அக்கினி அரக்கனுடைய கால் குளம்புகளை யார் கொண்டு வருகிருர்களோ, அவர்களுக்கு இளவரசியையும் இந்த ராஜ்யத்தில் பாதியையும் தருகிறேன்'' என்று தீர்ப்புக் கூறினுர்.

''மகாராஜா அவர்களே, உங்கள் புதிய அறிவிப்புப்படி இதோ அரக்கனின் கால் குளம்புகள்'' என்று கூறிக் கீர்த்தி தன் கையோடு கொண்டு வந்திருந்த பெட்டியிலிருந்து குளம்புகளை எடுத்து வெளியே வைத்தான். மயங்கி விழுந்த நளசர்மாவை இரண்டு வீரர்கள் தூக்கிக் கொண்டு போனுர்கள் சமையற் கட்டுக்கு. அவனது மூர்ச்சையைத் தெளிவித்துச் சுடச் சுட மிளகு ரசம் கொடுத்தார்கள். கிடைத்தற்கரிய அதிர்ஷ்டம் இப்படி வந்து கைநழுவிப் போனதை எண்ணிய நளசர்மா அப்படியே இடிந்து போய் விட்டான். அவனுக்கு ஒரு குதிரையையும் ஒரு பொற்கிழியையும் கொடுத்து மங்களபுரிக்கே அனுப்பி வைத்தார் மந்தஹாஸர். அவன் கதை அதோடு முடிந்தது.

கீர்த்தி தன் இளவரசுப் பட்டத்தை உறுதிப்படுத்திக் கொண்டான். ஆனுலும் மன்னரின் அன்புக்கு அருகதையுள்ளவனுகவில்லை. அவன் மீதிருந்த கோபமும், வெறுப்பும் இன்னமும் குறையவில்லை. ஏன், அதிகமாயிற்று என்றே கூறவேண்டும். அக்கினி அரக்கனைக் கொன்றது கீர்த்திதான் என்பது



உறுதியானதும் இளவரசுப் பட்டம் அவனுக்குத் திரும்பக் கிடைத்ததும் சபையோர் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபோது, மந்தஹாஸர் வெகுண்டார்.


"என்ன கூச்சல் இது? எதற்காக இப்படி ஆனந்தப்படுகிறீர்கள்? தன் தம்பிகளைக் கொன்ற இவனைப் பாராட்ட உங்களுக்கு வெட்கமாக இல்லை? கீர்த்தி வர்மனின் வெற்றியில் மகிழ்கிறவர்களைக் கொலைக்களத்துக்கு அனுப்பி வைப்பேன், ஜாக்கிரதை!" என்றதும் அவையில் நிசப்தம் நிலவியது.

"கீர்த்தி!..." என்றழைத்தார் மந்தஹாஸர். இளவரசன் வந்து வணங்கி நின்றான். "நீ மறுபடியும் பட்டத்துக்கு உரியவனாகி விட்டாய். ஆனால் சுயநலக்காரனான உன்மீது எனக்கு மதிப்போ அன்போ கிடையாது. கடமையைச் செய்யத் தவறியவன் நீ. இன்று அந்த அக்கினி அரக்கனைக் கொல்ல முடிந்த உன்னால் அன்று அதை நிறைவேற்றாமல் உன் தம்பிகளை அதற்குப் பலி கொடுத்தாய். அன்று நீ என்ன கூறினாய்? 'அக்கினி அரக்கனாவது ஒன்றாவது? அப்படி ஏதுமே கிடையாது' என்றாயல்லவா? இன்று அதைக் கொல்லுமளவுக்கு திறமை படைத்திருக்கும் நீ அன்று நாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான் என்று அறிந்த அறிவாளியாகவுமிருந்திருக்கிறாய். ஆனால் அதை மறைத்துத் தம்பிகளைக் கொல்வதற்காகச் சதி செய்து நாடகமாடினாய். வஞ்சகனான உனக்கு நான் என் வாக்குப்படி பத்தாயிரம் பொற்காசுகளைத் தருகிறேன். ஏற்றுக்கொள்" என்று கூறித் திரும்பினார். பொக்கிஷ அதிகாரி ஒரு பொற்கிழியுடன் முன்வந்தார். அவர் கையிலிருந்த பொற்காசுகள் கொண்ட மூட்டையைக் கீர்த்தியின் முன்னால் தூக்கிப் போட்டார் மந்தஹாஸர்.

"இதை எடுத்துக் கொண்டு நீ இந்நாட்டை விட்டுப் போய்விடு. என் முன்னால் நிற்காதே" என்று கத்தினார்.

கீர்த்தி வர்மன் இத்தனைக்கும் ஆத்திரப்படவில்லை. அமைதியாகவே இருந்தான். தன் காலடியில் வந்து விழுந்த பொற்காசுகள் அடங்கிய மூட்டையைக் குனிந்து எடுத்துக் கொண்டு வெளியேறத் திரும்பினான். அப்போது மந்தஹாஸரின் குரல் மறுபடியும் அதிர்ந்தது.

"நில்! நான் இன்னொன்றை மறந்து விட்டேனே. மஞ்சுளாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாமா? வா இங்கே" என்றார். (தொடரும்)



மண்வெளிப் பயணம்!


விண்வெளிப் பயணத்தின் அனுபவங்களையும், அதன் ஆராய்ச்சி, அற்புத அமைப்புக்களையும் குழந்தைகளும் அறிந்து அதில் ஆர்வம் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு பிரிட்டிஷ் நிறுவனம் விளையாட்டுச் சாதனம் ஒன்றை உருவாக்கி யிருக்கிறது. இந்த விளையாட்டுக் கருவி கண்ணாடி கலந்த பிளாஸ்டிக்கினால் முட்டையைப் போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏழு வயதிலிருந்து பதினேழு வயதுடைய குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் இந்தக் கலம் செய்யப்பட்டிருக்கிறது. விண்வெளியில் மிதக்கும் கப்பலில் அதை இயக்கும் 'பைலட்' எப்படி அமர்ந்திருப்பாரோ அதே மாதிரி இந்தப் பொம்மை அமைப்பிலும் உட்கார்ந்து கொள்வதற்கு வசதி உண்டு. விண்வெளியில் எப்படி அந்தரத்தில் அது மிதக்குமோ அதே மாதிரி உள்ளிருப்பவர் சாய்வதற்குத் தக்கபடி இந்த முட்டைக் கலமும் எல்லாத் திசைகளிலும் கோணங்களிலும் சுழன்று இயங்கக்கூடியது. ஓட்டுநர் தம் விருப்பப்படி சாய்ந்துச் சாய்ந்து இதை எந்த நிலைக்கும் திருப்பலாம். உண்மையான விண்வெளிக் கலத்தில் உள்ளது போல பைலட் பத்திரமாக ஆசனத்துடன் பிணைக்கப்பட்டிருப்பார். விண்வெளியில் பயணம் செய்வது போன்ற அதே அனுபவமும் ஆனந்தமும் ஒரு 'திரில்' லும் இதற்குள் உட்கார்ந்து இயக்கும்போது குழந்தைகளுக்கு ஏற்படும். குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டாலும்கூட இதில் பெரியவர்களும் கூட உட்கார்ந்து விண்வெளிப் பயணத்தின் அனுபவத்தை அடையலாம்.

நமது நாட்டுச் சிறுவர் பூங்காக்களில் இதுமாதிரி நிறைய வாங்கி வைத்தால் உங்களுக்கெல்லாம் எத்தனை சந்தோஷமாக இருக்கும்!

படமும் தகவலும்:

பிரிட்டிஷ் செய்தித் தகவல் அலுவலகம், லண்டன்.

தெரியுமா?



1425. காற்றளக்கும் கருவி (Wind Scale) கண்டுபிடித்தவர் யார்?

1426. கரடிகள் ஆம்னிவோரஸ் (Omnivorous) இனத்தைச் சேர்ந்ததாக விலங்கியலில் கூறப்படுகிறது. அப்படியானால் இதன் ஆகாரம் என்ன?

1427. கரடியை எந்த நாடு தனது தேசிய மிருகமாகக் கொண்டுள்ளது?

1428. சிங்கங்களின் கூட்டத்துக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

1429. புலி, ஜாக்வர், பியூமா, சிறுத்தைப்புலி இவைகளில் ஆப்பிரிக்காவில் காணப்படுவது எது?

1430. ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லேன்ஸ் - தோன்றியது எந்த ஆண்டில்?

1431. எலி, சுண்டெலி எந்த இனத்தைச் சேர்ந்தவை?

1432. ஒரு பிராணியின் கூட்டுக்கு Drey என்று பெயர். அது எந்தப் பிராணி என்று சொல்ல முடியுமா?

1433. பாபூன், ராகூன் (Racoon), கொரில்லா, மாண்டிரில் — இவைகளில் ஒன்று குரங்கினமல்ல. அது எது?

1434. ஜிப்ரால்டர் மலைகளில் வசிக்கும் குரங்குகள் எந்த இனத்தைச் சேர்ந்தவை?

1435. குரங்கு வகைகளில் மிகவும் அறிவுள்ளது எந்த வகை?

1436. நதி, பாலைவனம், கடல், மலை இவைகளில் ஆட்டர் என்ற பிராணி; எங்கு வசிக்கும்?

1437. டிங்கோ என்ற பிராணி காணப்படுவது எங்கே?

1438. பல்லவ வமிசத்தின் புகழ் பெற்ற நரசிம்ம வர்மரின் காலம் எது?

1439. ராஜ ராஜ சோழன் பட்டத்துக்கு வந்த ஆண்டு எது?

1440. குதுப்மினார் ஸ்தூபிக்கு அடிகல் நாட்டியது எப்போது?

1441. நாகாலாந்தின் தலைநகரம் எது?

1442. லட்சத் தீவுகள், மினிகாய், அமின்டைவ் இவைகளின் தலைநகரம் எது தெரியுமா?

1443. இங்கிலாந்துக்குக் கிறிஸ்துவ மதத்தைக் கொண்டு வந்தது யார்?

1444. ஜியாலஜிஸ்ட் என்பவர் எதை ஆராய்ச்சி செய்பவர்?

1445. தகரம், ஈயம், பித்தளை, அலுமினியம் — இவற்றில் கலப்பு உலோகம் எது?

1446. பாம்பாஸ் என்பது ஒருவகை புல். இது எங்கு அதிகமாகக் காணப்படுகிறது தெரியுமா?

1447. தாவரங்களை மட்டும் சாப்பிடும் பிராணிகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் ஒரு பெயர் சூட்டியுள்ளார்கள் ஆங்கிலத்தில். அது என்ன?

1448. சோளம், கோதுமை, தேங்காய், கரும்பு — இவைகளில் ஒன்று மட்டும் மற்றவையோடு சேர முடியாது. அது எது?

1449. வேல்ஸ் நாட்டின் தேசிய மலர் என்ன?

1450. முதன் முதலில் இங்கிலீஷ் கால்வாயை (English Channel) விமானம் மூலம் கடந்தது — ரைட் சகோதரர்கள், ப்ளரியாட், லிண்ட்பெர்க் — இவர்களில் யார்?

1451. ஒப்போஸம் என்ற பிராணியை எந்த நாட்டில் காணலாம்.

1452. துருவக்கரடி, பெங்குவின் பறவை, வால்ரஸ், ரெயின்டீர் — இவைகளில் அண்டார்க்டிக்கில் வசிப்பது எது?

1453. ஸ்பெயின் நாட்டின் விசேஷமான விளையாட்டு எது?


தெரியுமே!



1425. அட்மிரல் பியூஃபோர்ட் (Admiral Beaufort). 1426. எல்லாவிதமான உணவு வகைகளையும் உட்கொள்ளும். 1427. ரஷ்யா. 1428. பிரைடு (a Pride). 1429. சிறுத்தை. 1430. 1953-ம் ஆண்டில். 1431. கொரித்துத் தின்னும் வகையை. 1432. அணில். 1433. ராகூன். 1434. மனிதக் குரங்கு வகையை. 1435. சிம்பன்ஸி. 1436. நதிகளில். 1437. ஆஸ்திரேலியாவில். 1438. கி.பி. 642-668. 1439. கி.பி. 985. 1440. கி.பி. 1231-32ல். 1441 கொஹிமா. 1442. கவரத்திகோட்டை. 1443. செயிண்ட் அகஸ்டின் என்பவர். 1444. மண், பாறைகளை. 1445. பித்தளை. 1446. தென் அமெரிக்காவில். 1447. ஹெர்பிவோரஸ் (Herbivorous). 1448. தேங்காய். மற்றவை புல் இனத்தைச் சேர்ந்தவை. 1449. டாஃபடில். 1450. ப்ளரியாட் (Bleriot). 1451. வட அமெரிக்காவில். 1452. பெங்குவின் பறவை. 1453. காளையோடு சண்டை (Bull Fighting).

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

யூகோ பாங்க்கின் உதவிக் கரம்:



தொழிலதிபர்களுக்கு உதவ, பணவசதி செய்தளிக்கக் காத்திருக்கிறது

நீங்கள் ஒரு சிறுதரத் தொழில் தொடங்க எண்ணம் கொண்டிருந்தாலோ அல்லது முன்பேயுள்ளதை விரிவாக்க விரும்பினாலோ பண வசதிக்கு உடனே யூகோ பாங்க்கிற்கு வாருங்கள்.

எங்களது புதிய திட்டத்தின் கீழ் கட்டிடம் அமைத்தல், ப்ளான்ட் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு தாராளமான கடனுதவி பெறுவீர்கள்.

சுலபமான நிபந்தனைகள். ஆனால் ப்ளான்ட் உபகரணங்கள் வகையில் உங்கள் தற்சமய முதலீடு ரூ. 7.5 லட்சத்திற்கு மேல் போகக் கூடாது. இந்த ஒன்றுதான் நிபந்தனை.

விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள யூகோபாங்க் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

UCOC-38 TAM



